பராபவ ஞூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2026

மலர்: 9
இதழ்: 1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்



மஹா ஸம்ப்ரோக்ஷண
சிறப்பு இதழ்



MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





உகாதி உத்ஸவம்




ஸ்ரீராமநவமி உத்ஸவம்







பங்குனி உத்திரம்

பராபவ ஹூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2026

ஸ்ரீ:

மலர்: 9
இதழ்: 1


ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

மஹா ஸம்ப்ரோக்ஷண
சிறப்பு இதழ்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

**வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |**
**வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||**

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

'ருதுக்களில் நான் வஸந்த ருதுவாக இருக்கிறேன்' என்கிறான் கண்ணன் எம்பெருமான். இந்த பராபவ வருடம் தேசிகனடியார்கள் அனைவருக்கும் த்ருஷ்ட, அத்ருஷ்ட பலன்களை அளிக்கவேணுமாய் திவ்யதம்பதிளின் அம்புயத்தாள்களை வணங்கி வேண்டி நிற்கிறோம்.

நண்பகலில் நாம் அனுஷ்டிக்கவேண்டியவையும், ஸ்ரீபகவத் பாஷ்யகாரரால் 'இனி பரமைகாந்திகள் அநுஷ்டிக்கத் தக்கதான பகவதாராதன ப்ரோயோகத்தை கூறுகிறேன்' என்று நித்ய க்ரந்தத்தில் உபேதேசித்த இஜ்யையில், ஐந்தாம் பாசுரத்தில் எம்பெருமானுக்கு ஸ்நாநம் முதலான கிரிசைகளைப் பாகவதர்கள் எவ்வாறு அனுஷ்டிப்பர் என்று வைஷ்ணவ தினசரி என்னும் நூலில் நம் ஆசார்ய வள்ளல் தெரிவிக்கின்றார்.

'செழுமையான ஜ்ஞாநத்தையுடைய பாகவதர்கள், நிலவின் ஒளி போன்று, ஒப்பற்ற பிராட்டியுடன் உயர்ந்து நிற்கும் எம்பெருமானுடைய குளிர்ந்த சந்த்ரனைப் போன்ற திருமுக மண்டலத்தின் கண், புன்சிரிப்பாகிய அழகிய நிலவினால் வெளியாகும் ஸந்தோஷத்திற்குக் காரணமான தெளிந்த தீர்த்தம், அடிசில், இன்னும் பிற நிவேதநம் செய்யப்படும் வஸ்துக்கள் ஆகியவற்றிலும், தம் சக்திக்குத் தக்க, திருமஞ்ஜனம் முதலிய உபசாரங்களிலும் குறைவுபடாது நடந்துகொள்வர்' என்று கூறுகிறார் ஆசார்யர்.

வேதம் தமிழ் செய்த மாறனே தெய்வமென்றும், தமக்கு அன்னையாய், அத்தனாய் விளங்குபவர் அம்மாறனே என்றும் எம்பெருமானின் அருள் கொண்டாடும் நம் ஸ்வாமி தேசிகன் போன்றவர்களுக்காகவே மாறன் ஆயிரம் இன் தமிழ் பாடினார் என்றும் நம் எல்லோருக்கும் நல்வழி கண்ணி நுண் சிறுத்தாம்பு என்னும் தொல்வழி என்றும் ஆசார்யரால் போற்றப்பட்ட மதுரகவியாழ்வார் அவதரித்தது இந்த சித்திரையில் சித்திரை.

'உடையவருடைய ஸ்ரீபாஷ்யாதி ஸூக்திகள் வேதங்களின் மேன்மைக்கும் மேலே போய், கேட்பவர் செவியில் அமுத மழை பொழிகின்றன. அதனால் தான் இவற்றை மிகமிகப் பயின்றதனால் மலர்ந்த மேதைமையையுடைய மஹான்களுக்கு எப்பொழுதும் ஆராவமுதாகிய எம்பெருமான் பின்னொரு காலத்தில் போக்யனாகிறான்' என்று ஸ்வாமி ஸ்ரீதேசிகனால் கொண்டாடப் பட்ட எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யகாரராக அவதரித்தது சித்திரையில் திருவாதிரை.

இவ்வளவு ஏற்றங்கள் உடைய சித்திரை இதழில், இம்மாதத்தின் பெருமையைப் போற்றும் காப்பகக் கட்டுரையுடன், வையம் போற்றும் வகையில் நடைபெற்ற நம் தேவஸ்தானத்தின் மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவத்தின் தொகுப்பும் காட்சி களும், வழக்கமான தொடர்கள், சிறப்புக் கட்டுரைகள் இவற்றுடன் புதிய ஆங்கிலத் தொடருடனும் தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்...

ஸ்ரீ:

# Sacred Waters, Divine Wedding And Golden Chariot

## FROM THE DESK OF TRUSTEES



With the divine grace of Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal, the Devasthanam had the immense fortune of conducting the grand Samprokshanam Mahotsavam, which was celebrated with great devotion and splendour over five auspicious days (March 12 to 16). The sacred occasion was marked by Veda, Divya Prabandha goshti, with the participation of around 250 eminent scholars filling the precincts with the resonance of divine chanting. The Samprokshanam was further sanctified by the participation of revered Archakas from various Divyadesam temples.

The evening of the Maha Samprokshanam day witnessed the celestial Kalyana Utsavam of Perumal and Thayar, followed by a magnificent Purappadu on the resplendent Thanga Ratham through the Mada Veethis, drawing large gatherings of devotees who were blessed with divine darshan.

We were deeply honoured by the gracious presence and blessings of revered Acharyas, including His Holiness Srirangam Srimad Andavan and His Holiness Poundrikapuram Andavan Swamigal, whose divine Anugraham elevated the sanctity of the celebrations.

Following the Samprokshanam, the Devasthanam celebrated the Sri Rama Navami Utsavam for 10 days with great fervour. This was succeeded by the grand observance of Panguni Uthiram, performed on a magnificent scale, reflecting the devotion and collective participation of the devotees.

The sacred series of festivals continued with the annual Pallava Utsavam, accompanied by Purana Patanam for three days, enriching devotees with a spiritual and divine experience.

As we enter the auspicious month of Chithirai, preparations are underway for the Tamil New Year celebrations, to be followed by the 10-day Bhashyakara Utsavam, and the Avathara Utsavam of Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal, which we look forward to celebrating with equal grandeur and devotion.

The Devasthanam expresses its heartfelt gratitude to all donors, patrons, and devotees whose wholehearted support and contributions made the Maha Samprokshanam and subsequent festivals truly memorable. We humbly pray for continued patronage and participation in all future kainkaryams.

May the divine blessings of Perumal, Thayar and Swami Desikan be showered upon all!

## பராபவ வருட சித்திரை மாத பஞ்சாங்கம்

| ஆங்கிலம் | தமிழ் | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் / மே | சித் திரை | | | | | |
| 14.04.2026 | 1 | த்வாதசி | செவ்வாய் | சதயம் | சித்திரை விஷு புண்ய காலம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம், பெருமாள் வீதிபுறப்பாடு. ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 2--ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு பாஷ்யகாரர் திருமஞ்ஜனம். மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வருஷப் பிறப்பு: ஸ்ரீ T.D. விஜயராகவன் குடும்பத்தினர். பாஷ்ய காரர் உத்ஸவம்: புரிசை ஸ்ரீ R. ராம க்ருஷ்ணன் |
| 15.04.2026 | 2 | த்ரயோதசி | புதன் | பூரட்டாதி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 3--ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகாரர் உத்ஸ வம்: ஸ்ரீ V.R. ராஜ கோபால் ஐயங்கார் குடும்பத்தினர் |
| 16.04.2026 | 3 | சதுர்தசி | வியாழன் | உத்திரட்டாதி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 4-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தள்ளம் ஸ்ரீ ரகுநாதா சார்யர் குடும்பத்தினர் |
| 17.04.2026 | 4 | அமாவாசை | வெள்ளி | ரேவதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. தாயார் உள்புறப்பாடு, ஆஸ்தானம். பாஷ்யக்காரர் உத்ஸவம் 5-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வெள்ளிக்கிழமை: M/s. ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட். பாஷ்யகாரர் உத்ஸவம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர். அமாவாசை: ஸ்ரீ திருக்கண்ணமங்கை தேவநாதாசார்யர் குடும்பத்தினர் |
| 18.04.2026 | 5 | ப்ரதமை | சனி | அச்வினி | வஸந்த உத்ஸவம் 1-ம் நாள். காலை பெரு மாள், தேசிகன் திருமஞ்ஜனம். பாஷ்யகாரர் உத்ஸவம் 6-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வஸந்த உத்ஸவம்: ஸ்ரீ R. நாராயணன். பாஷ்யகாரர் உத்ஸவம்: ஸ்ரீ வஸந்த் ஷான்பாக் குடும்பத்தினர் |
| 19.04.2026 | 6 | த்விதீயை | ஞாயிறு | பரணி / க்ருத்திகை | வஸந்த உத்ஸவம் 2-ம் நாள். காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். பாஷ்யகாரர் உத்ஸவம் 7-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வஸந்த உத்ஸவம்: ஸ்ரீ R. நாராயணன். பாஷ்யகாரர் உத்ஸவம்: ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி குடும்பத்தினர் |
| 20.04.2026 | 7 | த்ருதீயை / சதுர்த்தி | திங்கள் | க்ருத்திகை / ரோஹிணி | வஸந்த உத்ஸவம் 3-ம் நாள். அக்ஷய த்ருதீயை. காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். பாஷ்யகாரர் உத்ஸவம் 8-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. பெருமாள் அலர்மேல்மங்காபுரம் எழுந்தருளல் | பாஷ்யகாரர் உத்ஸவம்: ஸ்ரீ R. முகுந்தன். வஸந்த உத்ஸவம்: ஸ்ரீ R. சந்திரசேகரன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21.04.2026 | 8 | சதுர்த்தி / பஞ்சமி | செவ்வாய் | ரோஹிணி / ம்ருகசீர்ஷம் | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 9-ம் நாள். காலை பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்ஜனம். மாலை பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகார் உத்ஸவம்: ஸ்ரீ T.C. ரங்கராஜன் - T.C. ஸ்ரீநாத் |
| 22.04.2026 | 9 | பஞ்சமி / ஷஷ்டி | புதன் | திருவாதிரை | ஸ்ரீராமானுஜ ஜயந்தி. காலை மங்களாசாஸனம். பின்பு வீதிபுறப்பாடு. காலை பெருமாள், பாஷ்யகாரர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், பாஷ்யகாரர் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பாஷ்யகாரர் மங்களாசாஸனம்: ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர். பாஷ்யகாரர் சாற்றுமுறை: ஸ்ரீ அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்யர் |
| 23.04.2026 | 10 | ஸப்தமி | வியாழன் | புனர்வஸு | ராமர் திருமஞ்ஜனம், ஸேவாகாலம், சாற்றுமுறை | V.D.R. பண்ட் |
| 24.04.2026 | 11 | அஷ்டமி | வெள்ளி | புஷ்யம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை யானை வாஹனம் | மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 25.04.2026 | 12 | நவமி | சனி | ஆயில்யம் | திருமால்வடை. | |
| 26.04.2026 | 13 | தசமி | ஞாயிறு | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 27.04.2026 | 14 | ஏகாதசி | திங்கள் | பூரம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | பழவேரி ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹாசார்யர் குடும்பத்தினர் |
| 28.04.2026 | 15 | த்வாதசி | செவ்வாய் | உத்திரம் | தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை உள்புறப்பாடு | S.V.S. ராகவன் பண்ட் |
| 29.04.2026 | 16 | த்ரோயதசி | புதன் | ஹஸ்தம் | அவதார உத்ஸவம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம். ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை பொழுதுடன் திருவாராதனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பிறகு தாயாருடன் உள்புறப்பாடு | ஸ்ரீ L.V. நரஸிம்ஹன் குடும்பத்தினர் |
| 30.04.2026 | 17 | சதுர்தசி | வியாழன் | சித்திரை | ஸ்ரீமதுரகவிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், மதுரகவியாழ்வார் வீதிபுறப்பாடு. திருமஞ்ஜனம், ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை நரஸிம்ஹ ஜயந்தி. மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம் | ஸ்ரீமதுரகவிகள் திருநக்ஷத்ரம்: சித்ரா பௌர்ணமி கமிட்டி. நரஸிம்ஹ ஜயந்தி: கொடவாசல் R. க்ருஷ்ணன் ஜெயகுமார் |
| 01.05.2026 | 18 | பௌர்ணமி | வெள்ளி | ஸ்வாதி | சித்ரா பௌர்ணமி | மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 02.05.2026 | 19 | ப்ரதமை | சனி | விசாகம் | திருமால்வடை | |
| 03.05.2026 | 20 | த்விதீயை | ஞாயிறு | விசாகம் | நம்மாழ்வார் | |
| 04.05.2026 | 21 | த்ருதீயை | திங்கள் | அனுஷம் / கேட்டை | நாதமுனிகள் | |
| 05.05.2026 | 22 | சதுர்த்தி | செவ்வாய் | கேட்டை | தொண்டரடிபொடி ஆழ்வார் | |
| 06.05.2026 | 23 | சதுர்த்தி / பஞ்சமி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 07.05.2026 | 24 | பஞ்சமி / ஷஷ்டி | வியாழன் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 08.05.2026 | 25 | ஷஷ்டி / ஸப்தமி | வெள்ளி | உத்திராடம் | பெருமாள், தாயார் மூலவர் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் தங்கக் கேடயம் உள்புறப்பாடு | மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09.05.2026 | 26 | ஸப்தமி / அஷ்டமி | சனி | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதிப்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர் |
| 10.05.2026 | 27 | அஷ்டமி / நவமி | ஞாயிறு | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 11.05.2026 | 28 | நவமி / தசமி | திங்கள் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 12.05.2026 | 29 | தசமி / ஏகாதசி | செவ்வாய் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 13.05.2026 | 30 | ஏகாதசி / த்வாதசி | புதன் | உத்திரட்டாதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ K. கோவிந்த ப்ரசாத் |
| 14.05.2026 | 31 | த்வாதசி / த்ரோயதசி | வியாழன் | ரேவதி | திருமால்வடை | |

## வைணவ வழக்குச் சொற்கள் 20

**புரந்தரன்:** இந்திரன்

**புருஷகாரம்:** இடைநின்று பரிந்து பேசுதல்; recommendation

**புருஷகார வைபவம்:** (அடியாருக்காக) ஸ்ரீதேவி பெருமாளிடம் பரிந்துரைத்தல்

**புருஷார்த்தம்:** அறம், பொருள்; இன்பம், வீடு என்ற நாலில் ஒன்று; வேண்டும் பொருள்

**புஷ்கலம்:** நிறைவு

**புஷ்கரிணி:** திருக்குளம்

**புலவன்:** திருமங்கையாழ்வார்

**புற வீடு:** பரஸ்தானம் (ப்ராயாணத்திற்கு முன் வேறு வீட்டில் இருக்கை)

**புறம்புல்கல்:** முதுகைத் தழுவுதல்

**புற வீடு விட்டிருத்தல்:** வேறோர் இடத்தில் இருத்தல், பர ஸ்தானம்

**புள்ளரையன்:** பக்ஷிராஜன் (கருடன்)

**புளகாங்கிதம்:** மயிர்க்கூச்செரிதல்

**புளிக்குளித்தல்:** பிரசவத்தீட்டு (நீங்குதல்)

**புழக்கடை:** கொல்லைப் புறம்; ஞச்ஞிடு தூச்ஞூஸ்ரீ

**புதுவை:** ஸ்ரீவில்லிபுத்தூர்

**புக்னம்:** மடித்த புல்

**புலரி:** விடியற்காலம்

**பூதங்கள்:** அடியார்

**பூமிப் பிராட்டி:** பூதேவி

**பூர்வபக்ஷம்:** வாதப்போரில் முதலில் கருத்துக்களை முன் வைத்தல்

**பூர்வர்:** முன்னோர்; நாதமுனி தொடங்கி 18-ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வாழ்ந்த ஆச ார்யர், வைணவ அறிஞர்கள்

**பூத யக்ஞம்:** (அன்றாடம்) பிராணிகளுக்கு உணவிடல்

**பூவை:** காயாம்பூ

**பூம்பாவை:** பெரிய பிராட்டி, மஹாலக்ஷ்மி, திருமகள்

**பெரியபெருமாள்:** திருவரங்க மூலவர்

**பெரிய திருவடி:** கருடன்

**பெரிய முதலியார்:** ஆளவந்தார்

**பெரிய உடையார்:** ஜடாயு

**பெரிய அவசரம்:** ஸ்ரீரங்கம் பெருமாளுக்கான நைவேத்யம் அல்லது தளிகை

**பேரம்:** வடிவம்

**பேறு:** ஸ்ரீவைகுண்டம்

**பொத்தை:** குண்டு

**பொன்னடி:** பெருமாள், நம்மாழ்வார், இராமானுஜர் சன்னிதிகள் நீங்கலாக பிற சன்னிதிகளில் பாதுகை (சடாரி)

போக்கு வீடு: வழிஅமைப்பது; Outlet

**மகுப்பு:** (யானை) தந்தம்

**மஹதாஹ்வயர்:** பேயாழ்வார்

**மதனி:** அண்ணன் மனைவி

**மடைமாற்றல்:** திருப்பிவிடுதல்

**மகிழ் மார்பன்:** நம்மாழ்வார்

**மகிழ் மாறன்:** நம்மாழ்வார்

**மஹாராஜன்:** ஸுக்ரீவன்

**மங்களசாஸனம்:** பெருமாள், பெரியோர் மீது போற்றிப்பரவிச் செய்யும் பாசுரம் (அ) செய்யுள் (அ) ச்லோகம்

**மறை:** வேதம், திவ்ய ப்ரபந்தம்

**மலம்:** குற்றம்

**மரவடி:** பாதுகை

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

(தொடரும்...)

ஸ்ரீ:

# தேசிக ஸந்தேசத்தில் மயூரபுரநாதனின் மஹாஸம்ப்ரோக்ஷண வைபவம்

**ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்**

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்வாமி தேசிகன் விபவத்தில் எழுந்தருளியிருந்த ஸமயம் **ஹம்ஸ ஸந்தேசம்** எனும் அத்யாச்சர்யமான விப்ரலம்ப ச்ருங்கார ரஸமய காவ்ய க்ரந்தத்தை நமக்கருளியுள்ளார். ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸீதா பிராட்டியைப் பிரிந்து விரஹாவஸ்தையில் இருந்த ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன், கிஷ்கிந்தையின் தாமரைத் தடாகத்தில் ஒரு ஹம்ஸ பக்ஷியைப் பார்க்கிறான். பிராட்டியிடம் சென்று தன் வார்த்தைகளைச் (ஸந்தேசத்தை) சொல்லி வரும்படி அந்த ராஜஹம்ஸத்தைத் தூதுவிடுகிறான். செல்லவேண்டிய மார்கம், செல்லும் வழியில் திருமலை, திருக்கச்சி, திருவரங்கம் போன்ற ஸேவிக்க வேண்டியதிவ்யதேசங்கள், அவ்வெம்பெருமான்களின் திருக்கல்யாண குணங்கள், மேன்மைகள் என அனைத்தையும் விளக்கமாக வர்ணித்துக்கூறி தூது அனுப்புகிறான். அந்த பக்ஷியும் ஸீதையினிடம் சென்று ஸ்ரீராமனின் ஸந்தேசத்தை எடுத்துரைத்தது. பிறகு ஸ்ரீராமன் இலங்கை அரக்கனை வீழ்த்தி ஸீதையை மீட்டுத் திருஅயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் கண்டருளினார் என இந்த க்ரமத்தில் ஸ்வாமி தேசிகன் மிகவும் ஸ்வாரஸ்யமாக இந்த ஸந்தேச காவ்யத்தை நிர்மாணித்துள்ளார்.

தற்போது இந்த க்ரமத்தில், அர்சாவதாரத்தில் மாடமாமயிலை திவ்ய க்ஷேத்ரத்தில் நிரந்தரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனையும், அலர்மேல்மங்கையையும் அநுபவிக்கும் நம் தூப்புல் குலமணி, இவ்வெம் பெருமானின் ப்ரபாவங்களையும், ஸமீபத்தில் இவன் கண்டருளிய மஹாஸம்ப்ரோக்ஷண வைபவங்களையும் சேர்த்து, தூது செல்லும் அந்த ஹம்ஸ பக்ஷியினிடத்தில் ஸ்ரீராமபிரான் வர்ணிக்கும் விதமாக அமைந்துள்ளது இந்த தேசிக ஸந்தேசம்.

**ஸ்ரீராமன்:** என்னுடைய ப்ரியமான தோழனே! உயர்ந்த வகையான அன்னமே! நீ செல்லவேண்டிய தெற்குத்திசை எப்படிப்பட்டது என்றால் - உயர்ந்த திவ்யதேசங்களைக் கொண்டதால் அதிக மேன்மை பொருந்தியது. ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் ஹஸ்திகிரி மலையில் உறையும் ஸ்ரீதேவாதிராஜனையும் ஸ்ரீபெருந்தேவியையும் மிகுந்த பக்தியுடன் வணங்கிய பிறகு, அதே தொண்டைமண்டல க்ஷேத்ராந்தர்கதமான மயூரபுரியை நீ அடைவாயாக. இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாவண்ணம் தேனமர் சோலைகள் நிறைந்ததும், குயிலொடு மயில்கள் நின்றாடும் அந்த மாடமாமயிலை திவ்யதேசத்தின்



பெருமையை உரைக்க ஆயிரம் பைந்தலைகள் கொண்ட அனந்தசயனானாலும் இயலாது. மன்னுதண் பொழில்களும், வாவிகளும், மதிள்களும், மாடமாளிகைகளும், மண்டபங்களும் நிறைந்துள்ள தென்னன் தொண்டயர்கோனின் மயிலையம்பதி அது. ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் புண்யபூமி. பஞ்ச பாண்டவர்களுக்காகத் தூது சென்ற ஸ்ரீகண்ணபிரான், கைரவிணீ கரையிலே பார்த்தன் தன் தேர் முன்நின்ற கீதாசார்யனாக ஸேவை ஸாதிக்கும் திருவல்லிக்கேணி திவ்யதேசத்துடன் சேர்ந்து பொலிந்து தோன்றுமூர் அது. இப்படி பல மேன்மைகள் பொருந்திய அந்த மயூரபுரி க்ஷேத்ரத்தில் வேதங்களையும், அதின் சுவைப் பயன்களையும் விழுமிய முனிவர்கள் விழுங்கும் கோதிலின் கனியாக எம்பெருமான் ப்ரகாசிக்கின்றார். எல்லாவுலகும் தொழும் சோதியாய், ஆதிக்கும் ஆதியாய், நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் தெய்வக்கோமானாய், உலப்பில் கீர்த்தியம்மானாய், அடியார்களுக்கு அபீஷ்ட வரதனாய், அழகினுக்கு அலங்கரிக்கும் அனங்கதேவனாய், திருவுக்கும் திருவாகிய செல்வனாய், அகலகில்லேன் என்றுரையும் அலர்மேல்மங்கையுரை மார்பனாய் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் என்கிற திருநாமம் கொண்டு அத்விதீயமாய் விளங்குகிறான்.

இனிய ஓசை எழுப்பும் குரலுடைய அன்னமே! நீ மயூரபுரிக்குச் செல்லும் நேரம், இமய மலையிலிருந்து மிகவுயர்ந்ததும், ஜாஜ்வல்யமானதும், விண்ணுலகத்தில் சந்த்ரனின் காந்தி முழுவதும் ஒருசேர உருக்கொண்டு ஊர்ந்து வருமாப்போலே பொலிகின்ற கிரணங்களையுடைய ரத்னங்களால் பொறிக்கப்பட்டதுமான அழகியதான ரதத்தில் மண்ணுலகின் இன்னழகை அநுபவித்தபடிக்கு

ஆகாச மார்கத்தில் தெற்கு நோக்கிச்செல்லும் ஒரு கின்னர மிதுனம் (கின்னர தம்பதிகள்) உன் கண்களுக்குப் புலப்படும். அவர்கள் மதுரமான இசையில் அந்த எம்பெருமானின் ஏற்றத்தையும், அவன் கண்டருளும் மஹாஸம்ப்ரோக்ஷண வைபவங்களின் பெருமைகளையும் ஸம்பாஷணம் செய்துகொண்டிருப்பர். அந்த கானத்தின் மூலம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் திவ்யசோபையிலும், தயா ஸமுத்ரத்திலும் மூழ்கியபடியே அவனை நீ நன்கு நமஸ்கரிப்பாயாக!

இவ்வாறு ஸ்ரீராமபிரானின் ஸந்தேசத்துடன் தூது செல்லத்தொடங்கிய அந்த ராஜஹம்ஸம், மாடமாமயிலை வந்துசேர்ந்தது. அச்சமயம் தேவ கானத்தில் பக்திரஸம் பொங்க கின்னர மிதுனங்கள் பாடிக்கொண்டிருந்ததைக்கண்டு ஸ்ரீராமனின் வார்த்தைகள் அதன் நினைவுக்கு வந்தன. கானத்தில் மூழ்கித் திளைத்தது ஹம்ஸ பக்ஷி. அந்த கின்னர தம்பதியின் ஸம்பாஷணை இதோ:

**கின்னரீ:** நாத! கீழே காணப்படும் காட்சி யாது? பகலோனான ஸூர்யன் பகல் விளக்காகும்படி ப்ரகாச மொன்று தெரிகிறதே! பின்னிட்ட சடையானும், பிரமனும், இந்திரனும், மற்றய தேவர்களும் கூட்டமாக நீள்வாசலில் காத்துக்கொண்டிருக்கின்றனரே, என்ன விசேஷம்? மேலும், ஆலைப்புகையால் அழற் கதிர்கள் மறைந்துள்ளதே! வேத ஒலியும் விழா ஒலியும் விண்ணை அதிர்விக்கச் செய்கின்றனவே, என்ன ஆச்சர்யம்!

**கின்னரன்:** தேவீ! இவ்வைபவத்தை என்னவென்று சொல்வது, வாசாமகோசரமாக நடக்கும் மஹோத்ஸவமன்றோ இது! ஆகிலும், எம்பெருமான் எமக்கு அளித்துள்ள விஷேச த்ருஷ்டியைக்கொண்டு என்னுடைய வாக்கிற்கு சுத்தி ஏற்படும் பொருட்டு முடிந்தவரை அவன் பெருமையை பேசுகிறேன், கேள்! பெரிய பிராட்டியார் அலர்மேல்மங்கையாக இங்கு எம்பெருமானுடன் நித்யவாஸம் செய்வதால், அவன் கொள்ளக்குறைவிலனாகவும் வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் வள்ளலாகவும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் என்கிற திருநாமம் கொண்டு விளங்குகிறான். முதல் ஆழ்வார்களில் பின்னானவரான மஹதாஹ்வயர் என்கிற ஸ்ரீபேயாழ்வார் அவதரித்ததும் இவ்வூரிலே. முன்னொரு காலத்தில் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி வேதாந்த தேசிகர் இந்த க்ஷேத்ரத்தில் சித்ர புஷ்கரிணீ தீரத்தில் அர்சாரூபியாக ஸேவை ஸாதித்துக்கொண்டிருந்தார். ஸ்வாமியின் ஸாந்நித்யத்தால், அவருக்கு ஸேவை ஸாதித்து, அவர் நித்தம் அநுபவிக்கும் வண்ணம் எம்பெருமான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் பரமக்ருபையுடன் மாடமாமயிலை வந்தமர்ந்தான். **யத் தர்மைரிஹ தர்மிணீ விஹரதே நாநா க்ருதிர் நாயிகா** என்பதற்கேற்றவாறு ஸமஸ்த ஜனனியான கமலையோ, **விஷ்ணோ: ஸ்ரீ: அநபாயிநீ** என்று ஒரு க்ஷணமும் பிரியாதபடி இங்கு அவனை தனக்கு க்ருஹமாக்கிக்கொண்டாள்! அது முதல் இத்திருக்கோயிலில் ஸ்வாமி தேசிகனை முன்னிட்டு நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸவம் என்று பற்பல உத்ஸவங்களை எம்பெருமான் கண்டருள்கிறான். தமக்கு மிகவும் ப்ரியமான ஸ்வாமி தேசிகனுக்கும் இப்படி பல உத்ஸவங்கள் நடக்கும்படிச்செய்து அதை பிராட்டியுடன் சேர்ந்து தான் அநுபவிக்கின்றான்.



பின்னானார் வணங்கும் சோதியான இவர்களை இன்றளவும் அடியார் குழாங்கள் ஸ்தோத்ரம் செய்து, போற்றி உகந்து தொழுது பணிகின்றனர், அதனாலேயே இந்த பாகவத ச்ரேஷ்டர்கள் ஒப்பில்லாமல் திகழ்கின்றனர்.


**கின்னரீ:** அஹோ பாக்யம்! இவ்வெம்பெருமானைப் பற்றி கேட்பதற்கே இவ்வளவு இனிமையாக இருக்கிறதே, இவனது திருமேனி சோபையைப் பருகுவதற்கு எவ்வளவு ஸுக்ருதம் செய்திருக்கவேணும். இவனிருக்கும் இவ்வூரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்களோ! ஸ்வாமி, கீழே இவ்வளவு வைபவங்களுக்குக் காரணம் ஏதோ மஹோத்ஸவம் என்றீரே, அதைப் பற்றியும் விரிவாகக் கூறுங்கள், கேட்க மிகுந்த ஆவலுடன் உள்ளேன்.

**கின்னரன்:** ப்ரியே! எப்பவுமே இவ்வாறு கோலாஹலமாகக் காட்சிதரும் இத்திருக்கோயிலில் மிகுந்த பக்தி ச்ரதத்தையுடன் 12 ஆண்டு களுக்கு ஒருமுறை நடக்கும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷண ஸந்தர்ப்பமிது மிகச்சரியான தருணத்தில் நாம் இங்கு வந்துள்ளோம்! இதோ, மஹாபூர்ணாஹுதிக்கு எல்லோரும் ஆயத்தமாகின்றனர். இன்னும் சற்றுநேரத்தில் அந்த ஸம்ப்ரோக்ஷண வைபவமும் நடக்கவிருக்கிறது, நாம் இங்கிருந்துகொண்டு அனைத்தையும் ஸேவிப்போம், வா!

**கின்னரீ:** ஹே நாத! இம்மஹோத்ஸவத்தில் அளப்பரிய ஆரமுதாய் விளங்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை தரிசிக்கப்போகிறோம் என்பதால் மிகவும் ஸந்தோஷமாக உள்ளது. எம்பெருமான் நமக்களித்துள்ள இவ்வாழ்ச்சிக்கு அவன் திருவடிகளைப் பற்றுவது ஒன்றே நம்மால் செய்ய இயலும் கார்யமாகும். மஹாபூர்ணாஹுதி நடைபெறுவதற்குள் இந்த ஸம்ப்ரோக்ஷண விழாவில் நடந்த கார்யக்ரமங்களை எடுத்துரைத்து என் செவிகளுக்கு அருள்புரியுங்கொல் ஸ்வாமி.

**கின்னரன்:** என் ப்ராண வல்லபையே! மேவி நின்று தொழுபவர்களின் வினைகள் போக,





மலர்மேலுறைபவள் உறைமார்பினனாக மேவும் இப்பிரானுக்குச் சொல்மாலைகளைச் சூட்டும் விதி கிடைக்கப்பெற்றதில் என்ன குறை நமக்கு! இம்மாயப்பிரான் கழல் வாழ்த்தினால், அதுவே நாமுற்ற ஸம்ஸார நோய்க்கு அருமருந்தாகுமே! நன்கு சொல்கிறேன், கேள்!

ஐந்து நாட்களாக நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் இவ்வுத்ஸவம், மாசி மாதம் 28ம் தேதி (12/04/2026) தொடங்கியது. தேவீ, இதன் அங்கங்களை ஐந்தாகப் பிரித்து உனக்குரைக்கிறேன் -

- **அர்ச்ய: ஸர்வ ஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீன:** என்று எம்பெருமானைத் தங்களிட்ட வழக்காய் கொண்டுள்ள மேன்மை பொருந்திய அர்ச்சகர்களின் யாகசாலை நிமித்த கார்யங்கள்
- திவ்யதம்பதிகளின் திவ்யஸேவை
- அந்தமிலாத் தேவனுக்கு அகஸ்த்ய பாஷையிலே அநவரதம் பல்லாண்டு பாடும் பரமைகாந்திகளான ஆழ்வார்களின் கோஷ்டி
- **வேதோSகிலோ தர்ம மூலம்** என்று வேத ரக்ஷணமே ப்ராணனாகக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணியும் வேதம் வல்லார்களின் கோஷ்டி
- நிஷ்காம்யர்களாய், வேட்கையெல்லாம் விடுத்து அவன் திருவடிகளையே சுமந்துழலும் ஸ்ரீபாதம் தாங்கிகளின் உயரிய கைங்கர்யம்

**அர்ச்சகர்களின் யாகசாலை நிமித்த கார்யங்கள்**

வானவர் நாட்டின் ஸேனாதிபதியும், தன் வேத்ர அசைவினால் இந்த விச்வம் முழுவதையும் வ்யவஸ்தை செய்யும் ஸூத்ராவதீ நாதனுமான ஸ்ரீவிஷ்வக்ஸேனர் எழுந்தருளி பகவத் ப்ரார்த்தனை, புண்யாஹவாசனம் மற்றும் ம்ருத்ஸங்க்ரஹணத்துடன் திருவீதி புறப்பாடு கண்டருளி இம்மஹோத்ஸவத்தைத் தொடங்கிவைத்தார். பின்னர் யாகசாலை ப்ரவேசம், அங்குரார்ப்பணம் மற்றும் முதல் வேளை ஹோமம் நடைபெற்றது.



மறுநாள் காலை ரக்ஷாபந்தனம் நடைபெற்று பிறகு, கங்கைகங்கைஎன்றவாசகத்தாலேகடுவினைகளையும் கங்கை, அதனின்றும் புனிதமாய காவிரி போன்ற புண்ய தீர்த்தங்களின் ஜலம் மாடவீதிகள் வழியாகக் குடை வாத்யங்களுடன் அர்ச்சக ஸ்வாமிகளால் சுமந்துவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நூதன விமான பிம்பங்கள் ஜலாதிவாஸம், சாயாதிவாஸம், மஹாகும்ப ஸ்தாபனத்துடன் ஓவ்வொரு வேளையும் சதுஸ்தானார்சனம், பூர்ணாஹுதி மற்றும் சாற்றுமுறை என்று பாஞ்சராத்ர ஆகம ப்ரகாரம் கார்யங்கள் வைதிக ச்ரத்தையுடன் க்ரமமாக நடைபெற்றது. ஓவ்வொரு வேளையும் பூர்ணாஹுதியின் பொழுது அர்ச்சக ஸ்வாமிகளால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஹவிர்பாகத்தை அந்தந்த தேவதைகளின் மூலம் அந்தர்யாமியாய் பெற்றுக்கொள்ளாமல், தாமே நேரடியாக ஸ்வீகரிப்பது போன்று ஸேவை ஸாதித்தனர் திவ்யதம்பதிகள். தேவர்களும்இவர்களைத்தம்கண்களாலே வாரிப்பருகி ஆனந்தக் கூத்தாடினர். இப்படியாக அருமாமறை அந்தணர்களின் இந்த வேள்விக் கொழும்புகை வளர்ந்து, நிறையார வான்மூடி, ஸூர்யனின் கதிர்கள் மறைந்து விளங்கும் வீதிகளைக்கொண்டதாயிற்று இம்மயிலை. இவர்களின் தீ ஓங்க ஓங்கத் தன் புகழோங்கி நிற்கின்றது மயூரபுரிநாதனின் ராஜதானி.

மேலும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீராமன், ஸ்ரீசக்கரத்தாழவார், ஸ்ரீஹயக்ரீவன், ஸ்ரீஆழ்வார் ஆசார்யர்களுக்கு 17 கலச விசேஷ திருமஞ்சனம் 2ம் நாள் மதியம் நடைபெற்றது. மறுநாள் மதியம் ஸ்ரீபெருமாள், ஸ்ரீதாயார் மூலவர்களுக்கு 17 கலச விசேஷ திருமஞ்சனமும் நயனோன்மீலனமும் நடைபெற்றது. 4ம் நாளான நேற்று ஸ்ரீபெருமாள் ஸ்ரீதாயார் ஸ்ரீஆண்டாள் ஸ்வாமி தேசிகன் உத்ஸவ மூர்த்திகளுக்கு 108 கலச விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. அப்பொழுது, 'த்வம் மே' 'நீ என்னைச் சேர்ந்தவன்' என்று ஸ்ரீரங்கநாதன், 'அஹம் மே' என்று திமிரிக்கொள்ளும் ஜீவர்களைப் பார்த்து ஸத்யம் செய்து காட்டுவதுபோல் திருமஞ்சன ஈரவாடையில் ஸ்ரீபராசர பட்டருக்கு அநுபவம் அளித்ததுபோல் ஸ்ரீநிவாஸன் இங்கு ஸேவை ஸாதித்தான், கின்னரீ. திருமகள், மண்மகள், நீளை முதலா எல்லாத்தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்க, திருவில்லாத் தேவரைத் தேறேல் என்கிற உயர்ந்த தருமத்தை இந்த திருமஞ்சன திருக்கோலத்தில் வெளிப்படுத்தினான் பங்கயக்கண்ணன்.

**திவ்யதம்பதிகளின் திவ்யஸேவை**

கின்னரீ! இந்த ஸம்ப்ரோக்ஷணத்தின் ஒவ்வொரு வேளையிலும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீஅலர்மேல் மங்கையும் விதவிதமாக திருவாபரணங்கள் பூண்டு ஸர்வாலங்கார பூஷிதர்களாய் ஸேவை ஸாதித்தனர். ஒரு காலும் அழியாத இவ்வழகை ஸ்ரீபேயாழ்வாரும், ஸ்வாமி தேசிகனும் அருகிலிருந்துகொண்டே அநுபவித்தனர். இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்று சொல்லும்படி இருந்தது இவர்களின் திவ்யசேர்த்தி.

கல்லிழைத்த திருவபிஷேகம், சவுரிக்கொண்டை, இரத்தினங்கள் இழைத்த வேங்கடாத்ரி கொண்டை, கல்லிழைத்த தொப்பஹாரம், சிக்குத்தாடை என பல விதமான கிரீடங்களைச் சூட்டிக்கொண்டு, ஒவ்வொரு ஸேவையிலும் அதற்கு முன்பைவிட அழகு கூடியதோ என்னலாம்படி குழலழகையும், வாயழகையும், கண்ணழகையும் காட்டி, பக்தர்களைத் தன் வசப்படுத்தினர் நூலாளனும் நூலாட்டியும்.

நேற்றிரவு, அரவத் தமளியினோடும் அரவிந்தப் பாவையுடனும் பள்ளிகொண்டான் பரந்தாமன். வடிவிணையில்லா மலர்மகள் மற்றும் நிலமகள் அவனின் மெல்லடியை பிடிக்க, மலர்மகளின் கைவருடலில் அவ்வடி சிவக்க, கண்ணும், கைகளும், அடிகளும் செந்தாமரையையொத்து ஸேவை சாதித்தன. இவ்வாறு தெய்வீகமானதொரு வீணா நாதத்தில் திவ்யதம்பதிகளின் சயனாதிவாஸ நிகழ்சியை மறவாமல் ஸேவித்த அடியார்கள் பிறவாதாரே!

**ஆழ்வார்கள் கோஷ்டி**

**நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே** என்று ஸ்ரீஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளைக்கொண்டும், **ஒரொன்று தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேற** என்று ஸ்வாமி தேசிகனின் ப்ரபந்தங்களைக்கொண்டும் அநந்யப்ரயோஜனமாய் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்குத் தொண்டு புரியும் பரமைக்காந்திகளின் திவ்யப்ரபந்த கோஷ்டி விண்ணதிரும்படி ஒவ்வொரு வேளையும் நடந்தேறியது. ஆழ்வார்களின் ஈரச்சொற்களில் நனைந்து, எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் உள்கரைந்து, மால்கொள் சிந்தையராய்,

கசிந்திழிந்த கண்ணீர்களுடன் நாத்தழும்பெழ நாரணனை அழைத்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் மெய்யடியார்கள் விண்ணவரின் பொலிகின்றனரே! இவர்களின் பாத தூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்தது, தேவீ!

**வேதம் வல்லார்களின் கோஷ்டி**

அடுத்து, நான்மறையாளர் நாளும் முறையால் வணங்கும் அணங்காய சோதியாய் திகழும் இவ்வெம்பெருமானின் வேத கோஷ்டியைக் கொண்டாடுவோம் வா, கின்னரீ! முறையால் வளர்க்கின்ற முத்தீயர்களான ஆமனத்து மறையவர்கள், நால்வேத மந்திரங்கொண்டு வணங்கிய இந்த ஸம்ப்ரோக்ஷண வேத கோஷ்டியைக் காண்பதே நம் கண் பயனாவது. இருக்கெசுச்சாமவேத நாண்மலர்களை ஒவ்வொரு வேளையும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்குச் சூட்டி அவன் பாதம் நண்ணி மெய்சிலிர்த்திடும் இந்த வேதப் பெரியோர்களை நினைத்து என் மனம் மெய்சிலிர்க்கிறது!

**கின்னரீ:** தந்யை ஆனேன் ப்ரபோ! பேராளன் பேரோதும் இப்பெரியோர்களை ஒருகாலும் பிரிகிலோம், ஸ்வாமீ! இதோ, நாம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மஹாபூர்ணாஹுதியும், மஹாஸம்ப்ரோக்ஷணமும் நடைபெற இருக்கிறது. ஸேவித்து விட்டு, கண்ணாரக் கண்டுருகிக் கையாரத்தொழுது தொடர்வோம் இந்த பாகவத கீர்த்தனத்தை.

**கின்னரன்:** என்னினுயிரே, சரியாக உரைத்தாய்! இம்மஹாத்மாக்களை நினைந்துருகி மஹாபூர்ணாஹுதியை மறந்திருப்பேன். வா, ஸேவித்து விட்டுத் தொடர்வோம்.

(ஸேவித்துக் கொண்டிருக்கும்பொழுது)

**கின்னரீ:** நாயக! யார் இந்த வயோ வ்ருத்தர்? இவ்வெம்பெருமானிடம் அளவற்ற காதல் பூண்டு, கண்ணீர் ததும்பி நிற்கின்றாரே?

**கின்னரன்:** ப்ரியே! இந்த ஸ்வாமியின் திருநாமம் அழிசூர் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர் என்பதாகும். நூறு வயதாகி சதமானம் கண்டருளிய இந்த ஸ்வாமியின் தலைமையிலே தான் இந்த மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெறுகிறது. வயோ வ்ருத்தர் மற்றுமின்றி ஜ்ஞான வ்ருத்தரும் ஆவார். ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்திலேயும், வேதாந்த சாஸ்த்ரத்திலேயும் மிகவும் நிபுணத்வம் பெற்றவர் இந்த மஹான். தம் பால்யத்திலிருந்தே ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்குத் தம்மை அர்பணித்து அர்ச்சக கைங்கர்யம் செய்யும் ஆசார சீலர். இந்த வைபவத்தை நன்கு நடத்திக் கொடுத்துள்ள இவ்வெம்பெருமானிடம் தீரா மையல் பூண்டுள்ளதால், அது அவரின் கண்களில் பாஷ்பதாரையாக வெளிவருகிறது. இதுபோன்று, அங்கு தெரிகிறாரே, அவர் ஸ்ரீ காஞ்சீபுரீ க்ஷேத்ரத்தில் தேவாதிராஜனுக்கும் பெருந்தவித் தாயாருக்கும் அநவரதம் அர்ச்சக கைங்கர்யம்



செய்யும் குலத்திலே இட்டுப் பிறந்தவர்களில் ஜ்ஞான வயோ வருத்தரான ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம வித்வான் ஸ்ரீ உ.வே. ராஜம் பட்டர் ஸ்வாமி. இவர்களுடன் ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், திருவள்ளூரிலிருந்து இன்னும் பல அர்ச்சக ஸ்வாமிகள் இவ்வைபவத்தை மேலும் மெருகூட்டும் வண்ணம் இங்கு வந்து கைங்கர்யம் செய்கிறார்கள். எம்பெருமானின் அப்ராக்ருதமான திவ்ய திருமேனியைத் தொட்டு கைங்கர்யம் செய்யும் இப்பெரியோர் தாள் பணிவோம், தேவீ!

த்ருமனும், த்ருமியும் பூர்ணாஹுதி, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷணத்தைக் கண்குளிர சேவிக்கின்றனர். பிறகு, பெரிய சாற்றுமுறை ஸந்தர்பம்.

**கின்னரீ:** ஸ்வாமீ, ஸ்வாமீ! இதோ பார்த்தீரா! இந்த யதீச்வரரை வணங்குவோம், வாருங்கள்! (இருவரும் வணங்குகின்றனர்)

**கின்னரன்:** தேவீ, இந்த யதிவரர் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தின் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனாக அலங்கரிக்கும் ஸ்ரீவராஹ மஹாதேசிகன். இந்த மயூரபுரிநாதனிடம் அளவற்ற ப்ரேமை கொண்டுள்ள ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம குருக்களின் பரம்பரையில் அவதரித்துள்ள இதானீம் ஸ்ரீமதாண்டவனும் அதே ப்ரேமைக்கொண்டு இவ்வெம்பெருமானை இந்த ஸம்ப்ரோக்ஷண ஸந்நிவேசத்தில், நேற்றும் இன்றும் எழுந்தருளி ஒவ்வொரு வைபவமாக இங்கிருந்துகொண்டே மங்களாசாஸனம் செய்து அநுபவித்து வருகிறார்.

இதே போன்று, கடந்த மூன்று தினங்களாக ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமத்தின் இதானீம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீஸ்ரீநிவாஸ மஹாதேசிகனும் இங்கு முகாமிட்டு ஒவ்வொரு வேளையும் எழுந்தருளி ஸ்ரீஸ்ரீநிவாஸனை மங்களாசாஸனம் செய்து அவனின் திவ்யஸேவைகளைத் தம் திருக்கண்களால் பருகிவருகிறார்.

'உபவீதினம் ஊர்த்வ புண்டரவந்தம் த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்ட ஹஸ்தம்' என்று மார்பில் பூணூல் துலங்க, அழகிய திருமண் காப்புடன், மூவுலகம் செய்த புண்யத்தின் பலனாய் மூக்கோல் ஏந்திய இந்த ஸ்ரீவைஷ்ணவ யதிஷ்ரேச்டர்களை தரிசிக்கும் க்ஷணமே நம் பாபம் தொலைகிறது, தேவீ!

த்ருமன் இவ்வாறு போற்றிக்கொண்டிருக்கும் ஸமயம், பாகவத ததீயாராதனம் இவர்கள் கண்களுக்குப் புலப்பட்டது.





**கின்னரன்:** ப்ரியதர்சினீ! அங்கே பார், **ஆராதனானாம் ஸர்வேசாம் விஷ்ணோ: ஆராதனம் பரம்। தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் பரம்।।** என்கிற வசனத்திற்கேற்ப இத்துணை அடியார்கள் எம்பெருமானின் ப்ரஸாதத்தை அமுது செய்கின்றனர். ஸம்ப்ரோக்ஷணம் பூர்த்தியாக இத்திருக்கோயிலின் வேதபாராயண ஸபையினர் மிகவும் உன்னதமான இந்த ததீயாராதன கைங்கர்யத்தை எதுவும் எதிர்பாராமல் வழுவிலா செய்து வருகின்றனர். பஹு ச்ரமத்தையும் பொருட்படுத்தாமல் திருமடப்பள்ளி பரிசாரகர்கள் இந்த பாகவதோத்தமர்களுக்குத் தேவையான பாகங்களை மிகுந்த சுவையுடன் ச்ரத்தையாகச் செய்கின்றனர்.

இருவரும் இப்படி பேசிக்கொண்டிருந்த ஸமயம், ஸ்ரீமந்நாராயணனின் பரதத்வத்தை ஸ்தாபிக்கும் உடல் மற்றும் திருச்சின்ன ஓசையின் இனிமையான நாதம் அவர்களின் செவிகளுக்கு இலக்காகின. எம்பெருமானின் திருக்கல்யாண மஹோத்ஸவ ஸேவை அவர்களுக்குப் ப்ராப்தமாயிற்று. திருமகளோடு இனிதமர்ந்த செல்வனாக, அலர்மேல்மங்கையுடன் அமர்ந்தநாதனான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனைக் கண்டு இன்பமுற்றனர். 'அக்ரே பர்த்து: ஸரஸிஜமயே' என்று ஸ்வாமி தேசிகன் கொண்டாடியபடி முன்னொரு காலத்தில் க்ஷீர ஸமுத்ரத்தின் அமுத வெள்ளத்தினின்று அவதரித்து தேவர்கள் அனைவரும் ஆச்சர்யத்துடன் பார்க்கும்பொழுது, நேராக சென்று எம்பெருமானின் திருமார்பில் அமர்ந்த பிராட்டி, இன்றும் தேவர்கள் திருக்கோயிலின் திருமுற்றத்தில் ஒன்றுகூடி நிற்க, அவ்வெம்பெருமானைத் திருமணம்புரிந்து அவன் வக்ஷ:ஸ்தலத்தில் ஏறி அமர்ந்து அவனை அலர்மேல்மங்கையுரைமார்பனாக்கி மகிழ்கிறாள் என்று கின்னரன் ஆஹ்லாதகரத்தில் துள்ளிகுதித்தான். பிறகு, நூதனமாக பட்டாபிஷிக்தனான ராஜா நகர வீதிகளில் வலம் வருவது போல், ஸம்ப்ரோக்ஷணம் கண்டருளிய ஆனந்தத்தில் ஸ்வர்ண ரதமேறி பெரிய மாடவீதிகளில் வலம் வந்து, அதன் பிறகு பிராட்டியுடன் சேர்ந்து பத்தி உலாத்தல் கண்டருளினான் மயிலை நாயகன்.

#### ஸ்ரீபாதம் தாங்கிகளின் உயரிய கைங்கர்யம்

**கின்னரீ:** ஸ்வாமி, நாம் எவ்வளவோ திருக்கோயில்களில் ஸ்ரீமந்நாராயணனைத் தொழுதிருக்கிறோம், ஆனால் எங்கும் இல்லாதபடிக்கு விலக்ஷணமாக இவ்வெம்பெருமானைத் தோள்களில் சுமந்து செல்கின்றனரே ஸ்ரீவைஷ்ணவர்கள், தயை கூர்ந்து இவர்களைப் பற்றி எனக்குக் கூறுங்கள்.

**கின்னரன்: வாபோகுவா இன்னம் வந்தொருகால் கண்டுபோ** என்று ஸ்ரீராமனை முன்னும் பின்னுமாக எழுந்தருளச்செய்து ஸ்ரீதசரத சக்ரவர்த்தி அநுபவிப்பானாம். அதுபோல், அர்ச்சாவதாரத்தில் இவ்வெம்பெருமானைத் தங்கள் தோள்களில் எழுந்தருளச்செய்து பல விதங்களில் அந்த அநுபவத்தை பாகவதர்கள் அனைவரும் உருகும் வண்ணம் உயரிய கைங்கர்யம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் தாங்கிகள் இவர்கள். உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை என எல்லாமே ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் ஸ்ரீபாத கைங்கர்யமே என்று அவன்

பாதம் பணியும் வல்லார் இவர்கள். இவ்வாறு காதல் செய்யும் தொண்டர்கள் நம்மையாளும் பரமரே!

**கின்னரீ:** ஆஹா, வலந்தாங்கு சக்கரத்தண்ணார்க்காளான இக்கோதிலடியார்கள் திருத்தாள்வணங்குவோம். ஹே ப்ரிய, காலை முதல் கவனிக்கிறேன், திருக்கோயில் முழுவதும் விதவிதமாக மிகவும் அழகாகனதாயும், கடினமானதாயும் விளங்கும் மாக்கோலங்கள் இடப்பட்டுள்ளனவே, இவற்றை இட்டவர்கள் யாரோ?

**கின்னரன்:** இத்திருக்கோயிலில் அடியார்கள் ஒருவருக்கொருவர் மெச்சும்படி ஸ்ரீநிவாஸனுக்கு ச்ரத்தையுடன் கைங்கர்யம் செய்கின்றனர். இவ்வூர் ஸ்த்ரீகள் தினமும் வந்து இவ்வெம்பெருமானுக்குத் திருக்கோலங்கள் இட்டு மகிழ்கின்றனர். மேலும் அவனுக்கு புஷ்பங்களைத் தொடுத்தும், திருக்கோயிலைச் சுத்தம் செய்தும், திருவிளக் கேற்றியும் தங்கள் கைங்கர்யங்களை விடாமல் செய்துவருகின்றனர். அதனாலேயே ஒப்பிலா மாதர்களாக திகழ்கின்றனர்.

**கின்னரீ:** நாத, இவ்வைபவங்களைப் பார்க்கும் பொழுது இவற்றை இவ்வளவு நேர்த்தியாகவும், அழகாகவும் ஏற்பாடு செய்தவர்களைப் பற்றித் தெரிந்துக்கொள்ள என்மனம் விழைகிறது, க்ருபை செய்யவும்.

**கின்னரன்:** தேவீ, இத்திருக்கோயிலைச் செவ்வனே வழி நடத்துபவர்கள் தர்மக்கர்த்தாக்கள் ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் ஸ்வாமி, ஸ்ரீ R. முகுந்தன் ஸ்வாமி மற்றும் ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி. மணியகாரர், அலுவுலகம் மற்றும் திருக்கோயில் ஊழியர்களின் துணைகொண்டு இம்மூவரே இந்த திருக்கோயிலின் அனைத்து உத்ஸவங்களையும், மஹாஸம்ப்ரோக்ஷண வைபவங்களையும் பிழையின்றி ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் கைங்கர்யமாகச் செய்து வருகின்றனர்.

**கின்னரீ:** ப்ரிய வல்லப! மிகவும் தன்யை ஆனேன்! இன்று முழுவதும் நாம் அநுபவித்த தேவாதிதேவனின் இவ்வுத்ஸவம் எளிதில் வேறெங்கும் காணக் கிடைக்காத ஒன்று. ஸாக்ஷாத் மன்மத மன்மதனான





எம்பெருமான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் தன் தேவியருடன் திகழ்ந்து நிற்க, அர்ச்சகர்கள், அருளிச்செயல் கோஷ்டியினர், வேதவிற்பன்னர்கள், ஸ்ரீபாதம்தாங்கிகள் மற்றும் அவனுக்கே பித்தரான மெய்யடியார்கள் என ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோருமே மிக ஒற்றுமையாக கைங்கர்யம் செய்வதைப் பார்க்கும்பொழுது மண்ணில் இது போல நகரில்லை என வானவர்கள் மலர்கள் தூவி இங்கு நண்ணி உறைகின்றனர் போலும்.

**கின்னரன்:** ஆம் தேவீ, **கருணா வருணாலயம்** என்றவாறு ஸ்ரீ ஸ்ரீநிவாஸனின் தயா ஸாகரத்தில் இன்று மூழ்கினோம். அத்யந்த நீசர்களாய் இருந்தும் நம்கண் பாசம் வைத்து நம் வினைகளை வேரறுக்கும் பரஞ்சுடர் சோதி இவன். என்னே அவன் க்ருபை!!

சரி, நாழிகை ஆகிவிட்டது, வா நாம் இங்கிருந்து கிளம்புவோம்.

கின்னர மிதுனங்கள் அங்கிருந்து கிளம்பின. இந்த ஸம்பாஷணத்தைப் பூர்த்தியாகக் கேட்டுக்கொண்டு ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை நன்கு தொழுது அநுபவித்தது ஹம்ஸ பக்ஷி. இவ்வளவு கீர்த்தியைக்கொண்டுள்ள இந்த பூமியைக் கண்டு முதலில் அஞ்சியது. ஒரு க்ஷணம் தன் சரீரத்தை நன்கு உற்று பார்த்துக்கொண்டது. **அலர்ந்த அம்புயத்திருந்து தேனருந்தி இன்னகல்** என்று முன்னொருகாலத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அவதரித்தபொழுது அவரின் கீர்த்தியால் லோகமே வெண்மையானது. அப்பொழுது இந்த ஹம்ஸங்கள் தங்கள் நாவின்வீறு இழந்தன (பாலைத் தண்ணீரிலிருந்து பிரித்து எடுக்கும் திறன் போயிற்று). அது போன்ற நிலை இங்கு ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் மற்றும் அவனின் அடியார்களின் கீர்த்தியைக் கண்டு திரும்பவும் ஸ்ரீபாஷ்யகாரர் அவதரித்துவிட்டாரோ எனும் ஐயத்தில் உற்று பார்த்து, பிறகு நிம்மதி அடைந்தது. பத்தி உலாத்தலில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கும், ஸ்ரீஅலர்மேல்மங்கைக்கும் தன் சிறகுகளை சாமரம் மற்றும் விசிறி போல் வீசி, தென்றல் காற்று அவர்கள் மீது படுவதுபோல் செய்து, பிறகு சோழநாடு செல்லப் புறப்பட்டது. ❋

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்













ஸ்ரீ:





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்















ஸ்ரீ:

கண்ணுக்கினியன



## மஹா ஸம்ப்ரோக்ஷணம்











# மஹா ஸம்ப்ரோக்ஷணம்
















மஹா ஸம்ப்ரோக்ஷணம்








ஸ்ரீ:





**பாதுகா ஸஹஸ்ர உத்ஸவம்**











## தவனோத்ஸவம்







## மஹா ஸம்ப்ரோக்ஷணம்















# மஹா ஸம்ப்ரோக்ஷணம்















ஸ்ரீ:





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்











ஸ்ரீ:

கண்ணுக்கினியன





மஹா ஸம்ப்ரோக்ஷணம்









ஸ்ரீ:





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்

















மஹா ஸம்ப்ரோக்ஷணம்





ஸ்ரீ:





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்

















மஹா ஸம்ப்ரோக்ஷணம்













ஸ்ரீ:




## மஹா ஸம்ப்ரோக்ஷணம்










## மஹா ஸம்ப்ரோக்ஷணம்












## மஹா ஸம்ப்ரோக்ஷணம்













கண்ணுக்கினியன





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்











கண்ணுக்கினியன





## மஹா ஸம்ப்ரோக்ஷணம்











ஸ்ரீ:

# சீர்மல்கும் சித்திரை

ஸ்ரீ உ.வே. E.V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, திருவத்திபுரம், வைகுண்டவாஸீ

*சீர்மிகுந்த சித்திரையில் தோன்றியவர் என்றென்றும்*
*பார் புகழ போற்றிட வீற்றிருப்பார் - கார்முகில் போல்*
*தோற்றமும் வள்ளலும் கொண்ட இராமன்*
*பிறந்ததால் சித்திரைக்கு ஏற்றம்.*

செல்வம் சேர்க்கும் சித்திரையாகும். வைதிகர்களுக்கும் லௌகிகர்களுக்கும் சித்திரை ஹிதமளிக்கும். **ருதூநாம் குஸுமாகர:** என்பது கீதாசார்யனின் ஸ்ரீ ஸூக்தி.

இந்த மாதத்தில் தான் எண்பது சதவீதம் மரம் செடி கொடிகள் தளிர்விடும். அதாவது துளிர்க்கும், பூக்கள் பூக்கும், மலர்களின் மணமும் கனிகளின் ரஸமும் சேர்ந்து எவ்வாறு சித்திரை சோபிக்கின்றதோ அவ்வாறு சித்திரை மாதத்தில் தோன்றியவரும் மதுரமாயிருப்பர். இது கல்யாண சுப கார்யங்கள் நடக்கும் மாதம்; காய்கனிகள் தரும் மாதமாகும். மனிதனுக்கு முக்யமானது கல்வி அக்ஷராப்யாஸம் செய்வதற்கு அக்ஷய த்ருதீயை சித்திரையில் தான் ஏற்படுகிறது. இம்மாதத்தில் கோயில்களில் ப்ரஹ்மோத்ஸவம், வஸந்தோத்ஸவம் முதலியன நடைபெறுகின்றன.

தாவரங்கள் மலர்களுடனும், தடாகங்கள் தாமரைகளுடனும், பெண்கள் பூஷணங்களுடனும் இனிய தென்றல் காற்றும் வீசும் மாதம் சித்திரையாகும். சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலம் என்று தமிழில் கூறப்படும். அதிக வெயிலும் குளிரும் இல்லாது ஸுகமான காலமிது. இந்தச் சித்திரை மாதத்தில் பலவிதமான பூக்கள் மலர்வதால் அவைகளிலுள்ள தேனைப் பருகுவதற்காக வண்டுகள் ரீங்காரமும் மாந்தளிர்களை உண்டு களிக்கும் குயில்களின் இனிய நாதமும் இம்மாதத்தில் ஏற்படும். மன்மதனுக்கு ப்ரியமான மாதமாகும்.

*காமன் கரும்பேந்தி காரிகையின் கண் கணையால்*
*ஏமப் பெரும் மயக்கம் தந்து - தமர்மகிழ*
*தென்றல் துணைவனுடன் சுற்றி வலம் வரும்*
*மன்னுபுகழ் சித்திரை தான்.*

எல்லா ஜீவராசிகளுக்கும் இந்த சித்திரையில் காமேச்சை உண்டாகும். லோகநாதனான ஸ்ரீ ராமபிரான் அவதரித்த மாதம் சித்திரை.

எல்லோராலும் வழிபடும் தெய்வம் ஸ்ரீராமபிரானாகும். ஏழை எளியவர்கள், வலிமை மிக்க பணக்காரரும் எல்லோருமே பின்பற்றக்கூடிய முக்ய நன்னெறிகளைத் தானும் நடத்தி உபதேசித்தவர் ஸ்ரீராமபிரானேயாவர். பல நன்னெறிகளில் ஒன்றான ஏக பத்நீ வரதத்தை எல்லோரும் மேற்கொண்டாலே இந்த நாட்டிலென்ன, எந்த நாட்டிலும் எந்தவிதமான துக்கமும் சண்டை சச்சரவுகளும் நிகழா. சொன்ன சொல் தவறாதிருத்தல், அண்டினவனை ஆதரித்தல், எளிய வாழ்க்கை முதலிய பலப்பல நடத்திக் காட்டினான் ராமன்.

ஸ்ரீ த்யாகராஜர் ஹரிகாம்போஜி ராகத்தில்

**ஒக மாட ஒகபாணமு ஒக பத்நீ வ்ரதுடே மநஸா**
**ஒக சித்தமு கலவாடே ஒக நாடுநு மரவகவே**

என்று ஆழ்ந்த கருந்துடன் கூறியுள்ளார்.

ஒகமாட– ஒரு சொல் - ஸத்யவசனம்

ஒக பாணமு - மூன்று உலகங்களையும் அழிக்கக் கூடியது ஒரே பாணம் அதுவும் ஓரே தடவையில்

ஒகபத்நீ வ்ரதுடே– ஒருவனுக்கு ஒரு மனைவி என்பது

'இப்படிப்பட்ட மஹாபுருஷனை - ஒரே சித்தத்தை யுடையவனை, ஒரே சிந்தனையுடன் மறவாதே மனமே'.

சாஸ்த்ரங்களை அறிந்து நன்னெறியில் தான் நின்று பிறரை நடத்தி வைப்பவன் ஆசார்யன். இலக்கணத்திற்கு இருப்பிடமான ஸ்ரீராமபிரான் ஆசார்யனாவான். கண்ணபிரான் தத்வார்த்தங்களைக் கொண்ட ஸ்ரீமத் பகவத்கீதை உபதேசித்து ஆசார்யரானார். ஸ்ரீராமபிரான் மனித தர்மங்களை நடத்திக் காட்டி உபதேசம் செய்து ஆசார்யரானார். ஸ்ரீ ராமபிரானுக்கு வசிஷ்டரும். விச்வாமித்ரரும் ஆசார்யர்கள். ஆசார்யரின் சொல்லை என்றும் கேட்க வேண்டும். அதன்படி நடக்க வேண்டும் நினைக்க வேண்டுமென்பதை நடை முறையில் ஸ்ரீ ராமபிரான் காண்பித்தார்.

பௌத்தர்களுடையவும், ப்ரச்சந்ந பௌத்தர்களுடையவும், சமணர்களுடையவும் வாய் பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்த ஸநாதந மதத்தைத் தூக்கி சாச்வதமாக நிலை நிறுத்தினார் ஸ்ரீராமானுஜர். அருள் தந்து மோக்ஷோபாயத்தை உபதேசம் செய்து வ்யாஸ ஸூத்ரத்திற்கு அந்வர்த்தமான உண்மையான அர்த்தத்தைக் கொண்ட பாஷ்யத்தை அருளிச் செய்தார். ஒன்பது க்ரஹங்களுக்கும் அதிபதி ஸூர்யன். அவருக்கு உச்ச ஸ்தாநம் சித்திரை மாதமாகும்.

ஒருவருக்கு ஜனன காலத்தில் ஸூர்யன் உச்சமாக யிருந்தால் அவருக்கு மிகுந்த நன்மை ஏற்படும். அரசு மரியாதை ஏற்படும், உத்யோகத் துறையில் சிறப்பு ஏற்படும். அதிலும் பத்தில் ஸூர்யன் இருப்பாரே

யானால் ஆன்மீகத்திலும் அரசுத்துறையிலும் சிறப்பு பெற்றுத் தலைவனாயிருப்பான்.

ஸ்ரீராமாநுஜருக்கும் ஸ்ரீ ராமபிரானைப்போன்று கடக லக்நம். பத்தில் ஸூர்யன் உச்சம். ஆகையால் ஆசார்ய ஸார்வ பௌமராய் விளங்கினார். மேலும் லக்நத்திற்குப் பன்னிரண்டில் குருவும் சந்த்ரனும் இருப்பதால் குரு சந்திர யோகம் ஏற்பட்டது. மேலும் லக்நத்திற்குப் பன்னிரண்டாம் ஸ்தாமான வ்யயஸ்தாநத்தில் சுக்ரஹமிருந்தால் ராஜயோகம் என்று சொல்லப்படுகிறது. **த்வாதச ஸ்தோ யதி குரு; தேவலோகம் ஸமநுதே** என்று கூறியுள்ளபடியால் தேவலோக ராஜயோகம் அதாவது இந்த்ரனைப் போல் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ராஜாவாகத் திகழ்ந்தார். 3, 5, 8, 11-ம் இடங்களில் பேதா க்ரஹங்கள் இருந்து லக்நத்தைப் பாராதிருந்தால் பெரும்புகழ் உண்டாகும் என்றபடியால் 6-ல் சனியும் 11-ல் ராஹுவும் இருந்து லக்கனத்தைப் பாராமலிருக்கிறபடியாலும் குருவும் புதனும் பரிவர்த்தரைப் பெற்றதனாலும் ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீவைஷ்ணவத் தலைவராகத் திகழ்ந்தார்.

பார்வதி பரமசிவனைப் பார்த்து 'தேவ தேவா! எல்லா மாதங்களுக்கும் அதிபதி யார்? அவரை எப்படிப் பூஜிப்பது? எந்த திதியில் பூஜித்தால் விசேஷபலன்? பூஜித்தவர் அடைந்த பலன் என்ன? அந்தக் கதையை எனக்குக் கூறவேண்டும். அதைக் கேட்டு நான் தந்யை ஆவேன் க்ருத க்ருத்யையாவேன்' என்று கேட்டாள். அதற்குப் பரமசிவன், 'பார்வதி! சித்திரை மாதத்தில் வளர்பிறை ஏகாதசியில் பூஜை செய்தால் விசேஷம். உபவாஸமிருந்து இரவில் கண்விழித்து ஊஞ்சலில் பகவானை தர்சித்தால் மிகுந்த பலன். சித்திரைக்குத் தலைவன் விஷ்ணு. இவருக்கு டோலோத்ஸவம் நடத்தி ஸேவித்தால் பஞ்ச மா பாபங்கள் போய்விடும். மற்ற பாபங்கள் போய்விடுமென்று கூறாமலேயே தெரிந்து கொள்ள வேண்டும். விஷ்ணுவை டோலையில் எழுந்தருளப் பண்ணினால் அதைக் காண என்னுடன் எல்லா தேவர்களும் கண்ணனைக் காண வருவார்கள். ருஷி கணங்களும் கந்தர்வ கணங்களும் **மகிழ்வார்கள்.** அப்ஸரஸ்கள் நடனமாடுவார்கள். கந்தர்வர்கள் பாடுவார்கள்'.

தர்மபுத்ரர் க்ருஷ்ணனிடம் சித்திரை மாத வளர்பிறை ஏகாதசியின் பெருமையைக் கூறும்படிக் கேட்டார். க்ருஷ்ணன் கூறுகிறார்.

தர்மபுத்ர! முன்பு வசிஷ்டர் திலீபனுக்குக் கூறியதை இப்பொழுது உனக்கு நான் கூறுகிறேன். சித்திரை மாத வளர்பிறை ஏகாதசிக்குக் **காமதா** என்று பெயர். விரும்பியதைக் கொடுக்கும் என்று பொருள்.

ஸகல போகங்களும் நிறைந்த நாகலோகத்தைப் புண்டரீகன் என்ற நாகராஜன் ஆண்டுவந்தான். நாகங்கள் காமரூபிகள் அதாவது இஷ்டப் படி உருவங்களை எடுத்துக் கொள்ளுவார்கள். அவ்வாறு சக்தி படைத்தவர்கள். கந்தர்வர்கள் அப்ஸரஸ்களும் அவ்வாறே சக்தி படைத்தவர்கள். அவர்களில் லலிதன் என்ற கந்தர்வனும் லலிதா என்ற அப்ஸரஸ்ஸும் மனமொத்து சதிபதியாய் நாகலோகத்தில் வாழ்ந்தார்கள்.

லலிதன் பாட்டில் வல்லவன். ஒரு ஸமயம் நாகராஜன் லலிதனைத் தன் ஸபையில் பாடச் செய்தான். எப்பொழுதும் லலிதன் தன் மனைவியை விட்டுப் பிரியாதவன். அன்று அவளைவிட்டுப் பிரிந்தமையால் அவன் நினைவாகவே இருந்தபடியால் பாட்டில் பிழை ஏற்பட்டது. அதைக்கண்டு கார்கோடகன் நாகராஜனிடம் சொன்னான். நாகராஜன் கோபங்கொண்டு காமாதுரனாக இருந்து ஸபையை அலக்ஷ்யப்படுத்திவிட்டாய். ஆகையால் நீ கோரரூபனான அரக்கனாவாய் என்று சபித்தான். அதன்படி லலிதன் அரக்கனாய் காட்டில் அலைந்து கண்ட மிருகங்களைக் கொன்று தின்று கொண்டிருந்தான். குகை போன்ற வாயையும் பத்துமைல் நீளமுள்ள கைகளையும் கோரமான கண்களையும் எண்பது மைல் நீளமுள்ள சரீரமும் கொண்டிருந்தான். இதைக்கண்டு வலிதா மிகவும் வேதனை அடைந்து ஒன்றும் தோன்றாமல் அக்காட்டிலேயே அலைந்தாள்.

ஒரு ஸமயம் ஒரு ஆச்ரமத்தைப் பார்த்தாள் அதில் ஒரு மாமுனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரை வணங்கி லலிதா தன் வ்ருத்தாந்தங்களைக் கூறினாள். தான் வீரதந்வா என்ற கந்தர்வ ச்ரேஷ்டனுடைய மகளென்பதையும் கூறினாள் என்னைக் காக்க வேண்டுமென்று கூறினாள். முனிபுங்கவர் மிக்க தயை கொண்டு அவளைப் பார்த்து 'ஓ பெண்ணே! இப்பொழுது சித்திரை மாத வளர்பிறை ஏகாதசி வருகிறது. அதில் உபவாஸமிருந்து இரவில் கண் விழித்து மறுநாள் அந்தப் பலனை தானம் செய்தால் நீ நினைத்த பலன் கிடைக்கும்' என்று கூறினார். அதன்படி சித்திரை மாத ஏகாதசியில் உபவாஸமிருந்து இரவில் கண்விழித்து மறுநாள் காலை ஸ்நாநம் செய்து பகவானைத் துதித்து பகவான் முனிபுங்கவர் எதிரில் தான் நேற்று இருந்த ஏகாதசி பலனை என் கணவன் சாப விமோசனத்திற்காக உங்களுக்கு அர்பணிக்கிறேன் என்று சொல்லி வணங்கினாள். பிறகு லலிதனுடைய ராக்ஷஸ ரூபம் போயிற்று. பிறகு இருவரும் தம் இருப்பிடம் சென்றனர். இது சித்திரை மாதப் பலனாகும். **காமாந் அவாப்நுயத் சைத்ர சுக்ல ஏகாதசி உபோஷநாத்** என்று சொல்வதால் சிறப்பு வாய்ந்தது சித்திரை.

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ③

## அதிகாரம் - 2 – பரதத்வோபப்ருஹ்மணாதிகாரம்

## பரதத்வ நிர்ணயம்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

இதுவரை ஸ்ரீராமபிரானின் மேன்மையையும் ஸ்ரீமத்ராமாயண க்ரந்தாவதாரத்தையும் பார்த்தோம். ராமாயண க்ரந்தத்தின் முக்ய நோக்கம் என்ன என்பதை ஸ்வாமி தேசிகன் **பரதத்வோப-ப்ருஹ்மணாதிகார:** என்கிற அதிகாரம் மூலமாக நிர்தாரணம் பண்ணுகிறார்.

முதலில் **உபப்ருஹ்மணம்** என்றால் என்ன? - வேதார்த்தங்களை சீரிய முறையில் தெரிந்துகொள்ள, அவ்வர்த்தங்களை எளிதாகவும், நிகழ்வுகளின் மூலம் தெளிவாகவும் நிலைப்படுத்த ஏற்படும் க்ரந்தம் உபப்ருஹ்மணம்.

வேதத்திற்கு உபப்ருஹ்மணமாக உள்ள ஸ்ரீமத்ராமாயணம் எதனைக் கற்பிக்கிறது?

இது பல தர்மங்களை எடுத்துக் காட்டுகிறது:

- பதி-வ்ரதை தர்மம் — பெண் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- மாதா-பிதா-புத்ர-புத்ரீ தர்மம் — பெற்றோர் குழந்தைகளிடமும், குழந்தைகள் பெற்றோரிடமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- தம்பி தமையனிடத்திலும்; தமையன் தம்பியினிடத்திலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?
- மஹர்ஷிகள் முன்னிலையில் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் என்னென்ன?
- எதிரிகளிடத்திலும் தர்மத்தை எப்படி அனுஷ்டித்தல் வேண்டும்?
- நண்பர்களுடன் பழகும் முறை என்ன?

என்று பலப்பல. இவ்வர்த்தங்களனைத்தும் வேதங்களில் போதிக்கப்பட்டுள்ளன; நாம் அனைவரும் அவையனைத்தையும் எளிதாகப் புரிந்து கொள்ளும்படி ஸ்ரீமத்ராமாயணம் நிகழ்வுகளாக நமக்குக் காட்டுகிறது.

**ஸத்யம் வத - தர்மம் சர** - இது ச்ருதி வாக்யம். தான் ஸத்ய வதனம் பண்ணுவதுமட்டுமின்றி, தன் தகப்பனாரின் ப்ரதிஜ்ஞை பொய்த்துவிடக்கூடாது என்று வனவாஸம் சென்றும், மநுஷ்ய-தர்மம், பதி-தர்மம், க்ஷத்ரிய-தர்மம் போன்ற எல்லா தர்மங்களையும் வேதத்தில் உள்ளது உள்ளபடி அனுஷ்டித்துக்காண்பித்வர் ஸ்ரீராமபிரான். அதனை நமக்குக் காட்டுவது இந்த உபப்ருஹ்மணம்.

இப்படி ராமாயணம் பல விதமான தர்மங்களை போதித்தாலும், அதில் ப்ரதாநமாகக் காட்டப்படுவது எது?

ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்றும், அவனை அடைய **முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே** - ஒரே உபாயம் சரணாகதி தான் என்றும் ச்வேதாச்வரோப நிஷத் உத்கோஷிக்கிறது. அதுபோல ஸ்ரீமத்ராமாயணம் ப்ரதானமாகப் போதிப்பது:

- **தத்வம்**– எல்லோராலும் சரணாமாக அடையத் தகுந்தவர் ஸ்ரீமந்நாராயணன் (பரதத்வம்),
- **ஹிதம்** – எல்லோருக்கும் அதிகாரம் உள்ள, எல்லாராலும் அனுஷ்டிக்கக்கூடிய சரணாகதி (உபாயம்)

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

முதலில் ஸ்ரீமத்ராமாயணம் பரதத்வத்தை எப்படி நிஷ்கர்ஷம் பண்ணுகிறது என்று ஆசார்யன் காண்பிக்கிறார்.

சிவன்-ப்ரஹ்மன் இவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஸ்ரீராமபிரான்.

எல்லோரையும் ரக்ஷிக்கும் பரதேவதை யார் என்பதை நிர்ணயம் செய்யும் பொருட்டு, சிலர் ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் அவருக்கு ஒப்பானவர் உண்டு என்றும், அவரோடு சேர்ந்து மூவர் (த்ரி மூர்த்திகள்) என்றும், சில ஸமயங்களில் அவரைக் காட்டிலும் மேம்பட்டவர்களாகவே இருவர் உள்ளனர் என்றும் ஒப்பிட்டு கூறுகின்றனர். இவ்வாறு நினைக்கும் அந்த இருவர் யார் என்றால் — **ஸர்வேச்வரனுடைய மகனும் பேரனும்** என்று ஆசார்யன் ரஸமாகக் குறிப்பிடுகிறார். நம் கவிஸிம்ஹத்தின் வார்த்தையில் உள்ள ஸ்வாரஸ்யம் - ஸாமாந்யமாக மகனையோ பேரனையோ விடத் தந்தைக்கே உயர்வு அதிகம் என்பது உலகநியதி. அதைப் போலவே, சிவன் மற்றும் ப்ரஹ்மா ஆகியோரை உயர்ந்த தெய்வங்களென சிலர் கருதினாலும் அவர்களுக்குக் காரணனும் ஆதாரனும் ஸ்ரீமந்நாராயணனே என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார் ஸ்வாமி தேசிகன்.

அதில் பேரனான ருத்ரனைக் காட்டிலும் பெருமாள் மேம்பட்டவர் என்பதை:

*ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா*
*ஷைவம் விஷ்ணு-பராக்ரமை:।*
*அதிகம் மேநிரே விஷ்ணும்*
*தேவாஸ்ஸர்ஷிகணாஸ்ததா ॥*
பால.கா. 75.19

ஸீதையின் ஸ்வயம்வரத்தில் சிவனுடைய வில்லானது யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு மிகப் பெரும் சக்தியின் அம்சமாக இருந்தது; அந்த வில்லை ராமபிரான் எளிதில் உயர்த்தி முறித்ததைப் பார்த்த தேவர்கள் மற்றும் முனிவர்கள், இது சாதாரண மனித வலிமை அல்ல, விஷ்ணுவின் தெய்வீக பராக்ரமம் என்பதை உணர்ந்தனர். அதனால் அவர்கள் விஷ்ணுவின் மஹிமை சிவனைவிட மேன்மையானது என்று எண்ணினர்.

ராமபிரான் பிராட்டியைத் திருமணம் செய்துகொண்டு அயோத்திக்குத் திரும்புகையில் பரசுராமர் ராமரை எதிர்த்து வந்து, 'நீ சிவனின் வில்லைக் களைந்தது பெரிய கார்யம் எனக் கருத வேண்டாம்; இதோ விஷ்ணுவின் வில்லையும் (வைஷ்ணவ தநுஸ்) நீ வளைத்து முறித்தால் தான் உன் பராக்கிரமம் உண்மையில் நிரூபிக்கப்படும்' என்று சவால் விடுக்கிறார். அதற்கு பதிலாக இராமர் அந்த விஷ்ணு வில்லையும் எளிதில் ஏந்தி, அதில் அம்பை ஏற்றி, பரசுராமரின் தபோபலத்தைச் சுருக்குமாறு காட்டுகிறார். **அதிகம் மேநிரே** என்று ராமனின் பராக்ரமத்தைப் பரீக்ஷித்த பரசுராமன் கூட விஷ்ணு பரத்வத்தை ஒப்புக்கொண்டதை ஸ்வாமி தேசிகன் இங்கே வால்மீகிமுனி ச்லோகம் கொண்டு காட்டுகிறார்.

மேலும், ராவணவதம் முடிந்த பின்பு ஸீதாபிராட்டி அக்நி-ப்ரவேசம் பண்ணும் தருவாயில் சதுர்முக ப்ரஹ்மா, ராமர் முன் நிற்கும் அனைத்து தேவர்களையும் முன்னிட்டு, அவரின் உண்மையான பரமாத்ம ஸ்வரூபத்தை வெளிப்படையாக அறிவிக்கிறார்:

*கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ச்ரேஷ்டோ ஞானவதாம் வர:।*
*உபேக்ஷஸே கதம் ஸீதாம் பதந்தீம் ஹவ்யவாஹநே ॥*
(யு.கா. 120 - 6)

*கதம் தேவகண ச்ரேஷ்டம் ஆத்மாநம் நாவபுத்த்யஸே ।*
*உபேக்ஷஸே வா வைதேஹீம் நுஷ: ப்ராக்ருதோ யதா ॥*
(யு.கா. 120 – 7)

ராமா! 'கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய' - நீயே எல்லா லோகங்களுக்கும் ச்ருஷ்டிகர்த்தா; ஸர்வோத்தமன்; 'ச்ரேஷ்டோ ஜ்ஞானவதாம் வர:' - ஜ்ஞானமுடையவர்கள் அனைவரிலும் மேலானவன்; **தேவகண ச்ரேஷ்டம்** — தேவகணங்கள் எல்லோரிலும் மேலானவன் நீயே - என்று ஸ்ரீராமனின் உத்க்ருஷ்டத்தைக் கொண்டாடுகிறான்.

ஸீதையின் அக்னிப்ரவேசத்தை பகவான் ராமர்





அபேக்ஷித்ததோ அல்லது தடுக்காமல் இருந்ததோ ராமாவதார ரஹஸ்யத்தின் ஓர் அம்சமே; ஸாமாந்ய மனிதர்கள் போல் பெருமாள்-பிராட்டி செய்து காட்டிய ஒரு அபிநயமே! அவருடைய ஸ்வரூபமானது 'ஸர்வோத்தமன்', 'ஜகத்கர்த்தா', 'பரமாத்மா' என்பது ப்ரஹ்மாவின் வாக்கினால் திண்ணம்.

இதனால், முன்பு பரசுராமர் வ்ருத்தாந்தத்தில் **அதிகம் மேநிரே விஷ்ணும்** என்று ருத்ரனைவிட விஷ்ணு மேன்மை வெளிப்பட்டது போல, இங்கு ப்ரஹ்மாவின் வாக்கினாலும் ஸ்ரீமந்நாராயணனே எல்லா தேவர்களுக்கும் மேலான பரம்பொருள் என்பதும் ஸ்பஷ்டமாக ஸ்தாபிக்கப்படுகிறது.

பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே... (திரு. 4-10-4) - என்று ஆழ்வாரும்,

மத்யே விரிஞ்சிசிவயோர்விஹிதாவதார: (வர.ப - 11) - என்று பெருமாளின் பரத்வத்தை ஆசார்யன் தானே வெளியிட்டருளியதும் இங்கு நன்கு சுவைக்கத்தக்கது.

எம்பெருமான் ஸ்ரீராமனே பரப்ரஹ்மம் என்று ப்ரஹ்மனே கூறுதல்: பிற தேவர்கள் தவிர்ந்து, பிரமன் மட்டும் தனித்த முறையில் பெருமாளைத் துதிப்பதை ஸ்வாமி தேசிகன் இங்கே பல ப்ரமாணங்கள் மூலமாக விளக்குகிறார். மற்றவர்கள் வாக்கிலிருந்து வருவதைக் காட்டிலும் பெருமாளோடு ஒப்பிட்டு சிலரால் பேசப்படும் பிரமனது வாக்கினாலேயே பெருமாளின் பரத்வம் ஸ்தாபிக்கப்படுவது **எதிரிகையாலே விடு தீட்டானது கணக்கிலே** – உலகில் எதிரி தன் கையாலேயே அளிக்கும் விடுதலைச் சீட்டைப் போல - இன்னும் சிறப்பன்றோ. அப்படி:

**அக்ஷரம் ப்ரஹ்ம ஸத்யம் த்வம்** - நீ அழிவற்றவன், பரப்ரஹ்மம் நீயே; எந்தவொரு விகாரமுமில்லாமல் எப்போதும் ஏகரூபமாயிருப்பவனும் நீயே என்றும்;

**த்வம் த்ரயணாம் ஹி லோகாநாம் ஆதிகர்த்தா ஸ்வயம் ப்ரபு** - மூவுலகங்களுக்கும் ஆதிகர்த்தாவாகவும் எல்லோரையும் நியமிப்பவனாகவும், யாராலும் தான் நியமிக்கப்படாதவனாக இருப்பவன் என்றும்;

**ஜகத் ஸர்வம் சரீரம் தே** - என்று சரீராத்மபாவ ஸம்பந்தத்தையும்;

**அஹம் தே ஹ்ருதயம் ராம ஜிஹ்வா தேவீ ஸரஸ்வதீ** - வேதத்தில் ஹ்ருதய சப்தத்திற்கு புத்ரன் என்று பொருள். அதன்படி நான் உனக்குப் புத்ரன்; ஸரஸ்வதிதேவீ உனக்கு நாக்கு என்று தான் ராமனுக்குப் புத்திரனென்றும் அவனால் பிறந்த கார்யப்பொருள் என்றும்;

**சரண்யம் சரணம் ச த்வாமாஹுர்திவ்யா மஹர்ஷய:** - திவ்யஜ்ஞானமுடைய மஹர்ஷிகள் உன்னை ரக்ஷிப்பதில் வல்லவனாகவும், ரக்ஷிப்பதற்குரிய உபாயமாகவும் போற்றுகின்றனர் என்றும்;

எம்பெருமான் ஸ்ரீராமனின் ஸர்வவிலக்ஷணத் வத்தையும், ப்ரஹ்ம லக்ஷணமான ஜகத்காரணத்வத் தையும், ஸர்வ சரீரத்வத்தையும், ஸர்வ நியந்த்ருத்வத் தையும், ஸர்வ சரண்யத்வத்தையும் படைக்கும் கடவுள் என்று சிலரால் கொண்டாடப்படும் பிரமனே பரக்கப்பேசுவதை ஸ்வாமி தேசிகன் இங்கே காட்டி சக்ரவர்த்தித் திருமகனினே பரதேவதை என்பதை ஸ்தாபிக்கிறார்.

மேலும் ச்வேதாச்வதரோபநிஷத், 'யாவனொருவன் ப்ரஹ்மாவை முற்பட ஸ்ருஷ்டிக்கிறான்' என்று ச்ரிய: பதியான ஸ்ரீமந்நாராயணனைக் கொண்டாடுகிறது. அதே கருத்தை ப்ரஹ்மா உத்தரகாண்டத்தில்:

*ஸமயஸ்தே மஹாபாஹோ ஸ்வாந் லோகாந் பரிரக்ஷிதும்।*
*ஸங்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி ।।*
*மஹார்ணவே சயாநோப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந: ।*

*[உத். 104. 3, 4]*

என்று தொடங்கி

## சித்திரையில் முக்கிய உத்ஸவங்கள்

**சித்திரை வருஷப்பிறப்பு**
ஏப்ரல் 14 (செவ்வாய்)

**வஸந்த உத்ஸவம் (3 நாட்கள்)**
ஏப்ரல் 18 (சனி) முதல் 20 (திங்கள்) வரை

**அக்ஷய த்ருதீயை**
ஏப்ரல் 20 (திங்கள்)

**ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்**
ஏப்ரல் 22 (புதன்)

**திரு அவதார உத்ஸவம்**
ஏப்ரல் 29 (புதன்)

**மதுரகவிகள் திருநக்ஷத்ரம், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி**
ஏப்ரல் 30 (வியாழன்)

**சித்ரா பௌர்ணமி**
மே 1 (வெள்ளி)

## New Matrimonial Column

We are also happy to inform our readers that, based on requests from several parents in our community, Desika Sandesam will soon introduce a special Matrimonial Column in the magazine as a **free service** to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms, and this new feature is proposed to be introduced soon. Parents who wish to participate may kindly send the details in advance so that they can be included in the upcoming issue.

**- Trustees**

*பத்மே திவ்யேர்க்கஸங்காசே நாப்யாம் உத்பாத்ய மாமபி।*
*ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம் ।।*
*ஸோஹம் ஸங்யஸ்தபாரோ ஹி த்வாமுபாஸே ஜகத்பதிம்।*
*ரக்ஷாம் விதத்ஸ்வ பூதேஷு மம தேஜஸ்கரோ பவாந்।*
*ததஸ்த்வமபி துர்த்தர்ஷ: தஸ்மாத் பாவாத் ஸநாதநாத்।।*
*ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் ஷ்ணுத்வம் உபஜக்மிவாந்।*
*அதித்யா வீர்யவாந் புத்ர: ராத்ரூணாம் ஹர்ஷவர்த்தந:।।*
(உத். 104. 7-10)

என்று ஸர்வேச்வரனே உலகுக்கு முழுமுதல் காரணம் என்றும், தான் அவனிடத்திலிருந்து தோன்றியவன் என்றும், அவன் கட்டளைக்கு உட்பட்டவன் என்றும், தனக்கு ப்ரஹ்ம பதவி அவனால்தான் வந்ததென்றும், மத்ஸ்யம் கூர்மம் முதலியவற்றின் நடுவில் எம்பெருமான் அவதாரம் செய்வது போல தேவர்களான தங்கள் நடுவேயும் க்ஷத்ரியர்கள் நடுவிலும் வந்து தன் ஸங்கல்பத்தாலே அவதரிப்பதாகவும் நான்முகன் பகவான் ராமனிடத்தில் நேரில் விண்ணப்பம் செய்தான்.

மேலும் ஸ்ரீராமன் அவதாரகார்யம் முடித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளும் போது:

*ஆகச்சவிஷ்ணோ பத்ரம் தே திஷ்ட்யா ப்ராப்தோஸி மாநத ।*
*ப்ராத்ருபிஸ்ஸஹ தேவாபை: ப்ரவிசஸ்வ ஸ்விகாம் தநும் ।।*
*வைஷ்ணவீம் தாம் மஹாதேஜ: தச்சாகாசம் ஸநாதநம் ।*
*த்வம் ஹி லோகபதிர்தேவ ந த்வாம் கேசந ஜாநதே ।*
*ருதே மாயாம் விசாலாக்ஷீம் தவ பூர்வ பரிக்ரஹாம் ।।*
(உத்.110. 8-10)

'மஹாவிஷ்ணுவே! உமக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகட்டும். நீர் எங்களிடத்திற்குத் திரும்பிவரும் பாக்யத்தைப் பெற்றோம். நீரே ஸர்வலோகங்களுக்கும் அதிபதி. தங்களை விட்டு எந்நாளும் பிரியாத மஹாலக்ஷ்மியைத் தவிர வேறு எவரும் உம்மை அறிந்தார்களில்லை' என்று பெருமாளுக்கு பல்லாண்டு பாடுகிறான்.

இவ்வாறு பிரமன் உள்பட அனைவரையும் காப்பவனாய், ப்ரபஞ்சத்திற்கு மூலகாரணமாய் உள்ள பரமாத்மா ஸ்ரீமந்நாரயயனனின் மேன்மையை விளக்கும் வேதப்பகுதிகளை வால்மீகி பகவான் தன் காவ்யத்தில் கொண்டாடுவதை ஸ்வாமி தேசிகன் இங்கே காட்டியருளி, இவ்வதிகாரத்தைத் தலைக்கட்டுகிறார்.

**(தொடரும்...)**


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:** ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# ரக்ஷணமும் அரக்ஷணமும்

*ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்*

*விதி: த்ரிபுர மர்த்தந: த்ரிதச புங்கவ: பாவக:*
*யம ப்ரப்ருதய: அபி யத் விமத ரக்ஷணே ந க்ஷமா: ।*
*ரிரக்ஷிஷதி யத்ர ச ப்ரதிபயம் ந கிஞ்சித் க்வசித்*
*ஸ ந: ப்ரதிபடாந் ப்ரபோ சமய ரங்கதாமாதிஷூ ॥*
*[அபீதி ஸ்தவம் - 26]*

''ப்ரஹ்மன், ருத்ரன் முதலான தேவர்களனைவரும் ஒன்று திரண்டு உன்னடி பணிந்தோரின் எதிரிகளை ரக்ஷிக்க முயற்சித்தாலும் அவர்கள் அஞ்சித் தோற்று ஓடுவர் என்பது திண்ணம். ஆனால் உன்னால் ரக்ஷிக்கப்படுபவர்க்கு எவராலும் எக்காலத்திலும் பயம் உண்டாகாது'' என்கிறார் ஆசார்யன் ஸ்வாமி தேசிகன்.

எம்பெருமானது ரக்ஷணம் உள்ளோர்க்கும் அது இல்லாதவர்க்கும் உண்டாகும் நிலைமையினை உள்ளங்கை நெல்லிக்கனியென அழுந்தக் கூறும் இந்த ச்லோகத்தைப் போன்ற ஆசார்யன் தேசிகனின் மற்றொரு ச்லோகம் ஸ்ரீகாமாஸிகாஷ்டகம் ஸ்தோத்ரத்திலிருந்து.

*த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை: த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை: ।*

'ந்ருஸிம்ஹா! நீ ரக்ஷிப்பதென்று ஸங்கல்பித்தால் வேறு ரக்ஷை அவச்யமில்லை' நீ ரக்ஷிக்காவிடில் ரக்ஷையென்று வேறெதுவுமில்லை.''

நம் ஸ்வாமி தேசிகன் ஆணித்தரமாக எடுத்தியம்பும் ரக்ஷணம், அரக்ஷணம் பற்றின இந்த விஷயத்தினை ஆழ்வார்கள் தங்களது பாசுரங்களில் மிக நேர்த்தியுடன் காண்பிக்கின்றனர்.

**பெரியாழ்வார்** (பெரியாழ்வார் திருமொழி 2-3-1)

**ரக்ஷணம்**

எம்பெருமானுக்கு ஹிதத்தினை நினைத்தோர் (ஆநுகூல்ய ஸங்கல்பம்) அவனால் ரக்ஷிக்கப்பட்டனர்.

**போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான்** – வஸுதேவர்

**உன்னைக் காதுகுத்த ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார்** – ஆய்ச்சிமார்கள்

**அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்** - யசோதை

**அரக்ஷணம்**

*எம்பெருமானின் திருவடி பணியாது, அவனை சேஷியாகக் கொள்ளாது, நமஹ – எனக்காக நான் இல்லை என்று நினையாது, தானே தனக்கு ரக்ஷகன் என்ற அஹம்பாவம் கொண்டோர் அவனது ரக்ஷணம் எனும் கட்டுக்குள் வாராது வதைக்கப்பட்டனர்*



த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிம் அந்யை:
த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை: கிம் அந்யை: ।
இதி நிச்சதிதீ: ச்ரயாமி நித்யம்
ந்ருஹரே வேகவதீ தடாச்ரயம் த்வாம் ॥
(காமாஸிகா அஷ்டகம் - 8)

**பொருதிறல் கஞ்சன் கடியன்** *– கம்ஸன்*

**பேய்ப்பால் முலையுண்ட பித்தனே** - *பூதனை*

**பேயாழ்வார்** *[மூன்றாம் திருவந்தாதி – 51]*

**ரக்ஷணம்**

எம்பெருமான் திருவடியினை ஆச்ரயித்தோர் ரக்ஷணம் ப்ரார்த்திக்கும் வரை காத்திருக்காமல் தக்க ஸமயத்தே அவன் ரக்ஷிப்பான் என்பதற்கு உதாஹரணம் கோவர்தனகிரி ப்ரகரணம். **அவனே அருவரையால் ஆநிரைகள் காத்தான்**

**அரக்ஷணம்**

ஆச்ரித ஸம்ரக்ஷணத்தினையே தனது ஆஹாரமாகக் கொண்டு தன்னடி பணிந்தோரின் விரோதிகளைத் தனது எதிரிகளாக பாவித்து அவர்களை வதைப்பவன்

அந்த காருண்ய சீலன்.

**அவனே அணிமருதம் சாய்த்தான்** - மருதமரங்களை சாய்த்த ப்ரகரணம்

**இலங்காபுரம் எரித்தானெய்து** - லங்காபுரியினை அழித்த பராக்ரமம்

**அவனே கலங்காப்பெருநகரம் காட்டுவான் கண்டீர் -** ஸர்வ சக்திமானான ஸ்ரீமந்நாராயணன் (மட்டுமே) தனது நிர்ஹேதுக க்ருபையினாலும் பரிபூர்ணமான ஸ்வாதந்த்ரியத்தினாலும் எந்த விதமான கலக்கங்களுமற்ற மோக்ஷத்தினை அநுக்ரஹிப்பான் (த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:). அவனது ரக்ஷணம் இல்லையென்றால் ரக்ஷிப்பாரற்ற ராவணாதிகளின் நிலைதான் உண்டாகும் (த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)

**ஆச்ரித ஸம்ரக்ஷணமே ஆஹாரம்**

ஆச்ரித ஸம்ரக்ஷணத்தினைத் தனது தலையாய கடமையாகக் கொண்டவன் எம்பெருமான். அவன் தன்னுள் குடிகொண்டதனால் யமபட்டினத்திற்குத் தன்னைக் கூட்டிச் செல்லலாம் என்ற எண்ணமே வ்யர்த்தம் என்கிறார் பெரியாழ்வார். எம்பெருமானின் ரக்ஷணமெனும் கட்டிற்குள் இருக்கும் தன்னிடம் நெருங்காமல் தன்னை விட்டுப் பாதுகாப்பாகத் தள்ளி இருக்கும்படி (ஐம்)புலன்களையும், வ்யாதிகளையும், ம்ருத்யுவையும், யமதூதர்களையும் எச்சரிக்கிறார் ஆழ்வார். உதாஹரணமாக சில பாசுரங்களைக் காண்போம்.

*சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி*
*வைத்தவிலச்சினை மாற்றித் தூதுவரோடி யொளித்தார்*
*முத்துத்திரைக் கடற்சேர்ப்பன் மூதறிவாளர் முதல்வன்*
*பத்தர்க்கமுதனடியேன் பண்டன்று பட்டினங்காப்பே.*
(பெரியாழ்வார் திருமொழி 5-2-2)

''எம்பெருமானிட்ட வழக்காய் இருக்கும் (தேவதாந்தரமான) யமப் பட்டணத்தில் அவரவர் பாப, புண்ய கணக்கினை எழுதி அதில் தனது யஜமானனின் கையொப்பத்தினை வாங்கி வைத்திருப்பான் சித்ரகுப்தன். ஸ்ரீமந்நாராயணனின் பக்தன் ஒருவன் (த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:) அவனெதிரில் வந்தானெனில், தனது பக்தனை ஹிம்சிக்கிறானே என்ற எம்பெருமானின் சீற்றத்திலிருந்து தப்பிக்க (த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:) அந்த கணக்கினையெல்லாம் கிழித்துப் போட்டு விட்டு பாதுகாப்பான இடத்தில் ஒளிந்து கொள்கிறான்''.

*பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய் நில்லாப்பாய்*
*ஈன்துழாய் மாயனையே என்னெஞ்சே - பேர்ந்தெங்கும்*
*தொல்லைமா வெந்நரகில் சேராமல் காப்பதற்கு*
*இல்லைகாண் மற்றோரிறை.*

(பெரிய திருவந்தாதி - 60)

''மனமே! கலங்காதே. எக்காலத்திலும் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனையே ஸ்மரித்தவாறிரு. கொடிய நரகத்தினை அடைந்து பலவாறு துன்பப்படாது நம்மை ரக்ஷிக்க வல்லவன் அவன் ஒருவனே **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)''.**

**இல்லைகாண்மற்றோரிறை** - பரமாத்மனான ஸ்ரீமந்நாராயணன் ஸர்வ சேஷி என்பதனால் சேஷபூதர்களாகும் தேவதாந்தரங்களால் நம்மை ரக்ஷிக்க இயலாது. நாராயணனல்லால் ரக்ஷிக்கும் தெய்வமென்று வேறொன்றில்லை **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:).**

*இளைப்பாயிளையாப்பாய் நெஞ்சமே! சொன்னேன்*
*இளைக்க நமன்தமர்கள் பற்றி - இளைப்பெய்த*
*நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்*
*தாய்தந்தை எவ்வுயிர்க்குந்தான்.*
(பெரிய திருவந்தாதி – 23)

ஆழ்வார் தனது மனதிற்கு ஹிதத்தினை சொல்வதாய் அமைகிறது இந்தப் பாசுரம்.

''மரணித்தவர்களை நரகத்திற்கு இழுத்துச் செல்லும் நமபடர்கள் அவர்களை அழுத்திப் பிடித்துத் தாளாத வலியினை உண்டாக்குவார்கள். அதோடு நில்லாமல், நாய்களை ஏவி கடிக்கச் செய்வர். எம்பெருமானால் மட்டுமே எப்படிப்பட்ட துன்பங்களிலிருந்தும் ஆச்ரிதர்களை ரக்ஷிக்க முடியும் **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை):.** அரக்ஷர்களாகும் தேவதாந்தரங்களைத் தேடிச் செல்வோர், எம்பெருமானின் (நேரடி) ரக்ஷணமெனும் கட்டிலிருந்து விலகி அடாதவைகளை அநுபவிக்கின்றனர் **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)''.**

**தேவதாந்தரங்களின் லக்ஷணம்**

*காப்பாரார்இவ்விடத்து? கங்கிருளின்நுண்துளியாய்*
*சேட்பாலதூழியாய்ச் செல்கின்றகங்குல்வாய்*
*தூப்பாலவெண்சங்கு சக்கரத்தன்தோன்றானால்*
*தீப்பாலவல்வினையேன் தெய்வங்காள்! என்செய்கேனோ?*
(நம்மாழ்வார் – திருவாய்மொழி 5-4-7)

ப்ரஹ்மன், ருத்ரன் முதலான சேதன வர்க்கத்தினைச் சேர்ந்த அவர தத்வங்களான தேவதாந்தரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான குறையினை உடையவை. அக்னியானவன் தகிக்கும் ஸ்வபாவத்தினை உடையவன். தேவர்களோ மற்றவரது துக்கத்தினை கண்ணிமைக்காது கண்டும் காணாதது போலிருப்பர். இப்படிப்பட்ட பாபங்களை ஸதா செய்து கொண்டேயிருக்கும் தேவதாந்தரங்களையும் கூட ரக்ஷிப்பவன் குறையொன்றுமில்லாதவனான ஸ்ரீமந்நாராயணனே. ஸர்வ ரக்ஷகனான ஸ்ரீமந்நாராயணன் அடியேனையும் ரக்ஷிக்க வேண்டும் **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:).** அப்படி அவன்

அடியேனை ரக்ஷிக்காவிடில் வேறெவரால் என்னை ரக்ஷிக்க முடியும்? **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)''**

*பாருண்டான் பாருமிழ்ந்தான் பாரிடந்தான் பாரளந்தான்*
*பாரிடமுன் படைத்தானென்பரால் பாரிடம்*
*ஆவானும் தானானால்ஆரிடமே? மற்றொருவர்க்கு*
*ஆவான் புகாவாலவை.*
(பெரிய திருவந்தாதி - 42)

''பார் உண்டான், உமிழ்ந்தான், இடந்தான், அளந்தான், முன் படைத்தான் என்று ச்ருதிகள் கொண்டாடும் ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ ஸ்வாமி. ஸர்வாவஸ்த்தைகளிலும் சித்தசித் என்று அனைத்திற்கும் ரக்ஷகனாயிருப்பதென்பது ஸர்வ ஸ்வாமியாய் இருப்பவனுக்கு மட்டுமே ஸாத்யப்படும் விஷயம். எம்பெருமானே ப்ரபஞ்சம். ப்ரபஞ்சமே எம்பெருமான் என்பதனால் அவனே ஸர்வ சேஷி என்பது ச்ருதிகள் அறுதியிடும் ஸத்யம்''.

*அவையமென நினைந்து வந்தசுரர் பாலே*
*நவையை நளிர்விப்பான்தன்னை கவையில்*
*மனத்துயர வைத்திருந்து வாழ்த்தாதார்க்குண்டோ?*
*மனத்துயரை மாய்க்கும் வகை*
(பெரிய திருவந்தாதி - 43)

''ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ சேஷி என்று உணராத ராஜஸ தாமஸப் பிறவிகள் மற்ற தேவதாந்தரங்களைப் பரதேவதை என்று நினைந்து அவர்களிடத்தே தமக்கு வேண்டியவற்றை ப்ரார்த்திப்பர். தம்மை நாடி வந்து ஸாமான்யர் கேட்பதை (எம்பெருமான் ஸங்கல்பிப்பதனால்) அருளும் தேவதாந்தரங்களுக்கு, தம்மைத் தாமே ரக்ஷித்துக் கொள்வதற்கான ஸ்வாதந்த்ரியம் கிடையாது. அதனால், தமக்கு ஆபத்து உண்டாகும் காலத்தே சேஷியான ஸ்ரீமந்நாராயணனிடம் சேஷ பாவம் கொண்டு ரக்ஷணம் வேண்டி நிற்பர்''.

*எங்குத்தலைப் பெய்வன்நான்? எழில் மூவுலகும் நீயே*
*அங்குயர் முக்கண்பிரான் பிரமபெருமானவன் நீ*
*வெங்கதிர் வச்சிரக்கை இந்திரன் முதலாத் தெய்வம்நீ*
*கொங்கலர் தண்ணந்துழாய் முடி என்னுடைக் கோவலனே!*
(திருவாய்மொழி 7-6-4)

''மூவுலகமாய் இருப்பவன் நீயே. ப்ரஹ்மன், ருத்ரன் முதலான அனைத்து தேவதாந்தரங்களாக இருப்பவனும் நீயே. ஸர்வமுமாக இருக்கும் உன்னை நீ ஸங்கல்பிக்காது அசக்திமானான அடியேன் ஸ்வயம் ப்ரயத்தநத்தினால் அடைவதென்பது துர்லபம். **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:).** வேறு கதியற்றவனான அடியேனுடன் ஸம்ச்லேஷிக்கத் திருவுள்ளம் பற்று என் கோவலனே! **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)''.**

**ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே ரக்ஷகன்**

*சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானமடைந்தவனே!*
*அற்றவர்கட்கருமருந்தே! அயோத்திநகர்க்கதிபதியே!*
*கற்றவர்கள்தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே!*
*சிற்றவைதன் சொற்கொண்ட சீராமா! தாலேலோ*
(பெருமாள் திருமொழி 8-6)

இங்கு சுற்றம் என்பது முனிவர்களைக் குறித்தது. அவர்களது ப்ரார்த்தனைக்கிணங்கி ரக்ஷண கார்யமாக தண்டகாரண்யத்தினை அடைகிறான் ஸ்ரீராமன். அஞ்சேல். உம்மை ரக்ஷிப்பதுடன் உமது விரோதிகளையம் அழிப்பேன் என்று ப்ரதிஜ்ஞை கொண்ட சீதை மணாளன் அதனை நிறைவேற்றிக் காட்டுகிறான். அநந்யகதி என்று தன்னடி பணிந்த முனி ச்ரேஷ்ட்டர்களை ஸ்ரீராமன் ரக்ஷித்தருள **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)** அவர்களுக்கு இன்னல் விளைவித்தவர்கள் ரக்ஷிப்பார் யாருமின்றி அழிந்து போயினர் **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)**

*கையார்சக்கரத்து என் கருமாணிக்கமே! என்றென்று*
*பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி*
*மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பாரார்?*
*ஐயோ! கண்ணபிரான்! அறையோ! இனிப்போனாலே*
(நம்மாழ்வார் - திருவாய்மொழி - 5.1.1)

''திருவாழித் திருச்சங்கினைத் தனது திருக்கரங்களில் ஏந்திய கரிய நிறத்தானே! என்று நெஞ்சார நினைக்காது வாயார (பொய்யாக) மட்டுமே சொன்னேன். எனினும், என்னுள் அந்தர்யாமியாக இருக்கும் எம்பெருமான் அடியேனுடைய கபடம் நிறைந்த வார்த்தைகளை ஏற்றுக் கொண்டான். தனது மெய்யன்பர்களை அரவணைப்பது போலவே அடியேனையும் ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றினான். எம்பெருமான் நிர்ஹேதுக க்ருபையினை ஸங்கல்பித்து விட்டானேயெனில் அதனை தடுப்பாரென்று எவரும் உளரோ! **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:). ஐயோ! கண்ணபிரான்! அறையோ! இனிப்போனாலே** - நீ என்னை விட்டு நீங்கிச் சென்றாயென்றால் அடியேனைக் காப்பார் யார் **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:).**

ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்றுணர்ந்து **(த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:)** அவனது ரக்ஷணமெனும் கட்டுக்குள் இருப்போரைத் தவிர ஏனையோருக்கு **(ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே)** புநராவ்ருத்தியற்ற நிலை உண்டாவதற்கு ப்ரசக்தி இல்லை **(த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை:).**

பதக முதலை வாய்ப் பட்ட களிறு கதறிக் கைகூப்பி என் கண்ணா! கண்ணா! என்ன உதவப் புள் ஊர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த அதகன் அடி பணிந்து த்வயி ரக்ஷதி ரக்ஷகை கிமந்யை: த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை கிமந்யை: என்று அவனிடம் ரக்ஷணம் ப்ராத்திப்போம்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (37)

## Verses Of Salutation On Some Acharyas Of Our Sampradaya

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Verses of salutation (தனியன்கள்) on some of the prominent acharyas in the lineage of our Sampradaya — from Sriman Narayana who is the first preceptor, to Kumara Varadacharya, the son of Swami Desika — have been put together here for the convenience of recitation.

Sriman Narayana:

லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம்!
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்!!
(Koorath-Azhwan)

குருப்ய: தத் குருப்யச் ச நமோ வாக மதீ மஹே!
வ்ருணீ மஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ!!
(Swami Desika, Nyasa Thilakam - 1)

கமப்யாத்யம் குரும் வந்தே கமலா க்ருஹமேதிநம்!
ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய ய: ஸ்வயம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 1)

**Sri Mahalakshmi:**

ஸஹதர்ம சரீம் சௌரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம்!
அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 2)

**Vishvaksena (Aippasi-Pooraadam):**

யஸ்யத்விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரச்சதம்!
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாச்ரயே!!
(Vishnu Sahasranamam - 2)


வந்தே வைகுண்ட ஸேநாந்யம் தேவம் ஸூத்ரவதீ ஸகம்!
யத் வேத்ர சிகர ஸ்பந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 3)

**Satakopa (Vaikasi-Visakham):**

அவிதித விஷயாந்தரச் சடாரே:
உபநிஷதாம் உபகாந மாத்ர போக:!
அபிச குணவசாத் ததேக சேஷி
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து!!
(Madhurakavi Azhwar)

ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம் இவ உதிதம்!
ஸஹஸ்ர சாகாம் யோத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம்!!
(Parasara Bhattar, Sri Rangaraja Sthavam - Poorva Sathakam - 6)

யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோதோ வகுளாமோத வாஸிதம்!
ஸ்ருதீநாம் விஸ்ரமாயாலம் சடாரிம் தம் உபாஸ்மஹே!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 4)



**Nathamunigal (Aani-Anusham):**

ஜ்யேஷ்டே அநுராதா ஸம்பூதம் வீரநாராயணே புரே!
கஜவக்த்ராம்சம் ஆசார்யம் ஆத்யம் நாதமுநிம் பஜே!!
(Thirunakshathra Thaniyan)

நாதேந முநி நாதேந பவேயம் நாதவாநஹம்!
யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்த ஆமலகதாம் கதம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 5)

நமோ சிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராஸயே!
நாதாய முநயேகாத பகவத்பக்தி ஸிந்தவே!!
(Aala Vandhaar, Sthothra Rathnam - 1)

**UyyakKondaar (Chiththirai-Kaarthikai):**

சைத்ர மாஸே க்ருத்திகாயாம் ஸ்ரீ ச்வேதாத்ரி ஸமுத்பவம்!
குரும் ஸ்ரீ புண்டரீகாக்ஷம் ஜயத்ஸேநாம்சம் ஆச்ரயே!!
(Thirunakshathra Thaniyan)

நமஸ்யாம்யரவிந்தாக்ஷம் நாதபாவே வ்யவஸ்திதம்!
சுத்த ஸத்வமயம் சௌரே: அவதாரமிவாபரம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 6)

**Manakkaal Nambi (Maasi-Magham):**

மாகே மகாயாம் ஸம்பூதம் ஸ்ரீரங்க நகராந்திகே!
குமுதாம்சம் ராமமிச்ரம் உபாஸே அஹம் ஜகத்குரும்!!
(Thirunakshathra Thaniyan)

அநுஜ்ஜித க்ஷமாயோகம் அபுண்ய ஜநபாதகம்!
அஸ்ப்ருஷ்ட மத ராகம் தம் ராமம் துர்யம் உபாஸ்மஹே!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 7)

**Aala Vandhaar (Aadi-Uththiraadam):**

ஆஷாடே ச உத்தராஷாட ஸம்பூதம் தத்ர வை புரே!
ஸிம்ஹாநநாம்சம் விக்யாதம் ஸ்ரீ யாமுந முநிம் பஜே!!
(Thirunakshathra Thaniyan)

நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:!
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:!!
(Thaniyan for Sthothra Rathnam)

விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாது ப்ருந்தாவநே ஸ்திதம்!
நிரஸ்த ஜிஹ்மக ஸ்பர்சே யத்ர க்ருஷ்ண: க்ருதா தர:!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 8)

**Periya Nambi (Margazhi-Kettai):**

ஜ்யேஷ்டாம் மார்கசீர்ஷேது ஸ்ரீரங்க க்ஷேத்ர ஸம்பவம்!
மஹாபூர்ணம் குரூத்தம்ஸம் குமுதாக்ஷாம்சம் ஆச்ரயே!!
(Thirunakshathra Thaniyan)

தயா நிக்நம் யதீந்த்ரஸ்ய தேசிகம் பூர்ணம் ஆச்ரயே!
யேந விச்வ ஸ்ருஜோ விஷ்ணோ: அபூர்யத மநோரத:!!
(Swami Desika, Yathiraja Sapthathi - 9)

**Sri Ramanuja (Chiththirai-Thiruvaadhirai):**

சைத்ரார்த்ரா ஸம்பவம் விஷ்ணோ: தர்சந ஸ்தாபநோத்ஸுகம்!
துண்டீர மண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே!!
(Thirunakshathra Thaniyan)

அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணச்ச தத: பர:!
பலபத்ரம் த்ருதீயாஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி!!
ப்ரணாமம் லக்ஷ்மண முநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்!
ப்ரஸாதயதி யத்ஸூக்தி: ஸ்வாதீந பதிகாம் ச்ருதிம்!!
(Swami Desika, Yathiraja Sapthathi – 10)

தஸ்மை ரமாநுஜார்யாய நம: பரம யோகிநே!
ய: ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஸோ ஸமதா!!

**Koorath-Azhwan (Thai-Hastham):**

மகரே ஹஸ்த நக்ஷத்ரே ஸர்ப்ப நேத்ராம்ச ஸம்பவம்!
ஸ்ரீமத் கூரகுலாதீசம் ஸ்ரீவத்ஸாங்கம் உபாஸ்மஹே!!
(Thirunakshathra Thaniyan)

ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரேப்யோ நம உக்திம் அதீமஹே!
யதுக்தய: த்ரயீ கண்டேயாந்தி மங்கள ஸூத்ரதாம்!!

சைத்ரே சித்ரோத்பவம் காஞ்ச்யாம் தேவராஜ குரோ: ஸுதம்!
ஸுபத்ராம்சம் குரூத்தம்ஸம் வாத்ஸ்யம் வரதம் ஆச்ரயே!!
(Thirunakshathra Thaniyan)

**Appullaar (Chiththirai-Thiruvadhirai):**

சைத்ரார்த்ரா ஸம்பவம் காஞ்ச்யாம் ரங்கராஜ குரோ: ஸுதம்!
ஸுப்ரதிஷ்டாம்சம் ஆத்ரேயம் ராமாநுஜ குரும் பஜே!!
(Thirunakshathra Thaniyan)

**Vedantha Desika (Purattaasi-Thiruvonam):**

நபஸ்யமாஸி ச்ரோணாயாம் அநந்தார்ய குரூத்பவம்!
ஸ்ரீ வேங்கடேச கண்டாம்சம் வேதாந்த குரும் ஆச்ரயே!!
(Thirunakshathra Thaniyan)



ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ!
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி!!
(Kumara Varadacharya)

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்!
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்!!
(Brahma-thanthra Swathanthra Jeeyar)

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே!
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம:!!
(Kumara Varadacharya)

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.
(Pillai Lokaacharya)

**Kumara Varadacharya (Aavani-Rohini):**

ச்ராவணே மாஸி ரோஹிண்யாம் ஜாதம் வேங்கட தேசிகாத்!
விச்வாமித்ராந்வயாப்தீந்தும் வரதார்யம் அஹம் பஜே!!
(Thirunakshathra Thaniyan)

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம்!
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே!!
(Thaniyan for Sri Deskika Mangalam)

We are indebted to our Acharyas no end for their great deeds for our Sampradaya and their guidance through numerous works. The least we can do is to remember the illustrious preceptors as much as possible. Hope recitation of these verses of salutation will help us to achieve the objective.

***(to be continued…)***

# Swami Desika – Master of Analogy (1)

## 100 Gems from Srimath Rahasya-thraya Saaram

**Smt. Padmalatha Sridharan, Chennai**

**Preamble**

Sriman Narayana is the first preceptor in our Visishtaadvaita philosophy. The unique lineage of our Sampradaya has continued unbroken till date (and will continue in the future!). There have been many preceptors, viz. Sriman Nathamunigal, Sri Alavandar, Sri Ramanuja, who have enriched our glorious Sampradaya by their works and also numerous other kainkaryams.

Swami Desika, who adorns the lineage down the line, is non-pareil in that, he strode like a colossus in the field of our Sampradaya works be it philosophical, dramatics, commentaries, poems, esoterics, sthothras or Tamil paasurams. He has authored 28 Stotras, 4 kaavyas, an allegorical drama, around 15 Vedanta granthas, 8 commentaries, 32 Rahasya Granthas and 24 Tamil Prabandhams.

Swami Desika was the one who established Sri Ramanuja Darsanam on a firm footing and cleared the misconceptions and controversies through his works. He has presented to us the whole framework of Saranaagathi in a structured way i.e specific answers to what, why, who, where and how. This is the ultimate gift to mankind which cannot be upstaged even by the Lord. It would not be irreverent to say that there has been no preceptor like Swami Desika nor will there ever be, who has defined, explained, illustrated and justified Saranaagathi in such a plausible way.

His magnum-opus, Srimath Rahasya-thraya Saaram, is a veritable 'How-to' book on Saranaagathi. Hence, it is a 'must' for every Sri Vaishnava to learn Srimath Rahasya-thraya Saaram under the tutelage of an Acharya at least after Saranaagathi if not before.

There are 32 chapters in Srimath Rahasya-thraya saaram of which the first 12 talk about the three Tattvas in our philosophy and the method of surrender to the Lord, the pre-requisites, the actual process and so on; the next ten about Life after Saranaagathi; the next four are clarifications on the concept of Saranaagathi; the next three about the Three Manthras; two chapters about the Qualities of Preceptor and Disciple and the final chapter gives a bird's eye view of the whole Grantha.

In each chapter Swami Desika resorts to examples, analogies and upakhyaanams (short stories) to get across the basic concept of the chapter. His mastery in giving apt examples and analogies is something to be marvelled at. The master-piece is studded with anological gems aplenty. Let us study in this series 100 of these which would give a taste of what is in store for us when we learn the Grantha in the traditional way from an Acharya!

**Analogical Gems 1 to 5**

**1. How the clouds absorb water from the sea and spill out rainwater to be useful to everyone (Guruparampara Saaram):**

"மேகங்கள் ஸமுத்ர நீரை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போலே"

This is an analogy for the Azhwars. The Vedas and other Sasthras are likened to the sea which is apt in two ways: 1) It is a huge body of water and too deep to explore – The Sasthras are innumerable and difficult to master; 2) Only those who are qualified can jump into the sea and get coral, fish etc. – the Sasthras are restricted to the first three Varnas and only they can obtain the Purushaarthas (what is desired by them, viz. wealth, fame, Moksha etc.).

The clouds absorb the salty sea water; change it into sweet rainwater and the downpour is enjoyed by all irrespective of who they are. Similarly, the Azhwars absorbed the inner meaning of the Sasthras, couched them in easy verses of Tamil and sang their heart out so that the Ultimate Truth could be understood by everyone irrespective of the caste or creed.

The change from salt water to rainwater is denoted by the change of language. In those days, the use of Sanskrit was restricted to the upper echelons of the society. Just as rainwater can be stored and used for all purposes, the Divya Prabandhams of Azhwars can be learnt and recited repeatedly to get all our desires fulfilled.

**2. How a parrot brought up in the hunter's abode talks (Upodhghaatha Adhikaaram):**

"வேடுவச்சேரியில் கிளி போலே"

Swami Desika narrates the story of the Lost Prince who had got separated from his father (the King)

during a hunting trip and equates him with the Jeevathma who subsisted in this world without knowing his entitlement to the perpetual vision of Sriman Narayana in Sri Vaikuntam. Here, Swami likens the prince to a parrot brought up in the hunter's abode. A pet parrot just repeats the words it has learnt in its current habitat, be they welcoming ones or violent ones.

Thus, a parrot brought up in the hermitage of sages, welcomes everyone, while the parrot in a hunter's dwelling utters threatening words, even if they are siblings. Just like a parrot which merely repeats the words without grasping their meaning, the prince assumed the food habits, apparel and behaviour of the hunters who brought him up in the jungles, as he did not know that he was of higher birth.

**3. How the cow, out of affection, floods its new-born calf (Upodhghaatha Adhikaaram):**

"அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும் தேநுவைப் போலே"

This is again an analogy for preceptors. The preceptors do not expect anything in return for themselves from their disciples. They are gratified if the Mumukshu (one who desires Moksha) realises his unique relationship with the Lord and adopts the means to obtain Him, viz Bhakthi Yoga or Saranaagathi. Just as the milk gushes out from the cow for a new-born calf, verses pour from the Acharyas' hearts through to the lips which enunciate the true nature of the three Thathtvas or realities.

Here, the interesting point to note is the affection the cow has towards its just-born calf. The cow displays enormous love and affection towards the calf by licking its body all over, nursing it and supporting it. This cannot be equated to any other love at any other time or place. Similarly, the preceptors' love for their disciples is so unsullied and pure, without expectation of anything in return, that they readily spill forth their knowledge in the form of verses for the benefit of mankind.

**4. How the misplaced liking shown by the crown prince towards the chamber-maids while languishing in prison, affects his prospects (Arthapanchaka Adhikaaram):**

"அபிஷேகத்திற்கு நாளிட்ட ராஜகுமாரனுக்குச் சிறையிலே எடுத்து கைநீட்டின சேட்டிமார் பக்கலிலே கண்ணோட்டம் உன்டாமாப் போலே"

Swami Desika gives a big list of material and not-so-material things which can make us stray from the path of realisation and prevent us from attaining Moksha. For instance, if a prince who is the king-in-waiting has to spend some days in prison due to some misdemeanour, he should still keep up his position and behave accordingly. Instead if he eyes the chamber-maids therein, who are conscious of their place, it would reflect badly upon him. Further, his behaviour would mar his prospects of succeeding the King.

Similarly, we are also waiting to be crowned in the kingdom of Moksha and our place is reserved once we have adopted the necessary means. While we languish in this world, due to our past misdeeds (Karma) we should be mindful of the exalted position awaiting us and should not let ourselves be ensnared by the five senses and their pleasures. It would be a pity to lose sight of our goal by indulging ourselves in material pleasures which are fleeting by nature.

**5. How there is no difference between persons who slipped in the first step and the 30th step (Arthapanchaka Adhikaaram):**

"முப்பத்திரண்டு அடியான துரவு தத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதாம் அடியிலே விழுந்ததோடு வாசியில்லாதாப் போலே"

This is a very interesting concept put forth by Sri Swami. Supposing a person wants to jump across a well of 32 feet, it doesn't make any difference whether he slips up at the 1st step itself or the 30th. Either way, he would not get across the well and would fall into it. Now, this Samsara is a big well which has to be crossed to reach the Nithya Vibhuthi or the permanent abode of Sriman Narayana.

As the saying goes, there is many a slip between the cup and the lip. We could have won over our desires for wealth or fame but still there could be a pitfall waiting and all our previous efforts could come to nought. Then, we would be in the same boat as all those who have no knowledge of the three Thathvas or those who have not adopted an Upaya (means to attain Moksha) or those who have opted for wrong means etc.

There exists the real danger of losing our way till the final ascent and even then, of reaching a different destination. So, it is imperative upon us to be careful every step of the way, not to succumb to any temptations and let ourselves off-guard. We have to be constantly striving to act in such a way not to invoke the displeasure of the Lord.

***(to be continued…)***



# *With Pranams:*



**R. Parthasarathy & Dhirish Parthasarathy,**
Nanganallur,
Chennai 600 061.



**SVDD thanks Sri R. Parthasarathy & Sri Dhirish Parthasarathy**
for sponsoring this month's issue of Desika Sandesam





மஹா ஸம்ப்ரோக்ஷணம் தங்க ரதம் புறப்பாடு









மஹா ஸம்ப்ரோக்ஷணம் தங்க ரதம் புறப்பாடு







